விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆனி 27 துல்ஹஃதா 14 இதழ் 140

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-7-1987

## தற்போதைய 'யுத்த நிலைமையினுல்' வடபகுதி வீடுகட்டும் திட்டத்துக்கு உதவ 'டச்' ஸ்தாபனம் தயக்கம்

### மக்கள் பலியாவதையிட்டும் கவலை

யாழ்ப்பாணம், சனி

மல்லாகத்தில் 41 சிறு வீடுகள் கட்டுவதற்கு உதவி கோரி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் விடுத்த கோரிக்கையை மதிப்பீடு செய்து முடிவெடுக்க நெதர்லாந்தின் தொண்டர் ஸ்தாபனமான 'டச் பிஷப்ஸ் லென்ரென் கம்பெய்ன்' தயக்கம் காட்டியுள்ளது. கடந்த இரு மாதகாலமாக யாழ் குடாநாட்டின்மீது ராணுவம் மேற்கொண்டுள்ள தாக்குதல்களையிட்டும் இந்த ஸ்தாபனம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருக்கு இந்த ஸ்தாபனத்தின் திட்டத்திணைக்களம் எழுதியுள்ள கடிதமொன்றில், 'யாழ். குடாநாட்டின் மீது இலங்கை ராணுவம் மேற்கொண்டுள்ள கடுமையான தாக்குதல்கள் எம்மைத் திடுக்கிட வைத்துள்ளன. பல

(5-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை விமானப்படைக்கு நவீனரக விமானங்கள் கொள்வனவு செய்யப்படும்

(கொழும்பு)

இலங்கை விமானப்படை மேலும் பல தாக்குதல்-பயிற்றுவிக்கும் நவீன ரக விமானங்களையும் மற்றும் போக்குவரத்து விமானங்களையும் கொள்வனவுசெய்யவுள்ளது. இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டதாகவும் கொள்வனவு செய்யப்படவேண்டிய விமானங்களின் வகைகளும் தீர்மானிக்கப்பட்டு விட்டதாகவும் தெரியவருகிறது.

பிரேஸிலில் உற்பத்தி செய்யப்படும் 'ருசானே' வகையே இலங்கை அரசாங்கத்தினுல் கொள்வனவு செய்யப்படவுள்ள 'தரைத் தாக்குதல் - பயிற்றுவிக்கும் விமானங்களென தகவலறிந்த வட்டாரங்கள் கூறின. குண்டுவீசும் வசதி ரொக்கட் ஏவும் வசதி உட்பட பல

(5ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பேசும் மக்களின் சுதந்திர சமாதான வாழ்வுக்கு இந்தியா முயற்சிக்க வேண்டும்

### இந்திய தூதரகச்செயலாளர் பூரியிடம் யாழ்.ஆயர் கோரிக்கை

(எம். வாமதேவன்)

"தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாகவும் நிரந்தர சமாதானத்துடனும் வாழ்வதற்கு அவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை அங்கீகரித்து அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும்" என்று இந்திய தூதரகச் செயலர் திரு. எஸ். எச். பூரியிடம் யாழ். ஆயர் கலாநிதி ஆ. தியோகுப்பிள்ளை ஆண்டகை வேண்டுகோள் விடுத்தார்.

விமானமூலம் நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த திரு. பூரி வடமராட்சி மக்கள் தங்கியுள்ள அகதிகள் முகாம், குண்டுவீச்சினுல் சேதமடைந்த கோவில்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டதைத் தொடர்ந்து ஆயர் இல்லத்தில் யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளையைச் சந்தித்தார்.

வடமராட்சிப் பகுதியில் நெல்லியடியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த ஆயிரக்கணக்காக புத்தூர் சிவன்கோவில், புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய இடங்களில் தங்கியுள்ள அகதிகளையும் திரு. பூரி நேரில் சென்று பார்வையிட்டார்.

### மக்கள் கதறி அழுதனர்

அகதி முகாம்களில் தங்கியிருந்த மக்கள் திரு பூரியைக்கண்டதும் அடுத்

(5ம் பக்கம் பார்க்க)

## கைதிகள் மீது துன்புறுத்தல்: நான்கு பொலிஸாருக்கு தற்காலிக வேலைநீக்கம்

(கொழும்பு)

பொலிஸ் பாதுகாப்பிலிருந்த கைதி ஒருவரை பொலிசார் தரக்குறைவாக நடத்தி துன்புறுத்தியுள்ளார்கள் என உயர் நீதிமன்றம் அண்மையில் அளித்த தீர்ப்பொன்றையடுத்து பாணந்துறை பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த நான்கு பொலிசார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் மா அதிபர் சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாணந்துறையைச் சேர்ந்த அமல் சுதத் சில்வா என்பவர், தாம் 1986ம் ஆண்டு சில களவுசம்பவங்கள்தொடர்பாக கைதுசெய்த பாணந்துறை பொலிசார் மனிதாபிமானமற்ற முறையில் நடத்திஞர்கள் என உயர்நீதிமன்றத்துக்கு முறையீடு செய்திருந்தார். பொலிஸ் அறையில் தமது கைகளைக்கட்டி உயரத்தில் தொங்கவிட்டார்கள் என்

(5-ம் பக்கம் பார்க்க)

## கடும் மோதலில் 5 ராணுவம் பலி!

### புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம். சனி

"வல்வெட்டித்துறை,பொலிகண்டி, யாக்கரை ஆகிய இராணுவமுகாம்களிலிருந்து நேற்று வெளியேறிய இராணுவத்தினருடன் ஏற்பட்ட கடுமையான நேரடி மோதலின்

(5ம் பக்கம் பார்க்க)

திறப்பு விழா

வவுனியா பஜாரில்
பனை அபிவிருத்திச் சபையின்
கற்பகம் விற்பனை நிலையம்
நாளை (12/7/87)
காலை 0.00 மணிக்கு
திறந்து வைக்கப்படவுள்ளது.

"ஆடிப்பிறப்பை முன்னிட்டுத் தரமான பனை வெல்லம் விற்பனைக்குண்டு"

எமது உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாப்போம்.

தலைவர்.
பனை அபிவிருத்திச் சபை.

[ஏ 1908]

## இந்திய விமான அத்துமீறல் விவகாரம்: இலங்கையின் பிரேரணையை பாகிஸ்தானும் எதிர்த்தது

(கோலாலம்பூர்)

யாழ் குடாநாட்டுக்குள் ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்டு துயருற்றிருந்த மக்களுக்கு இந்திய விமானங்கள் அத்துமீறிப் பிரவேசித்து உணவுப் பொட்டலங்களையும், மருந்து வகைகளையும் இறக்கிவிட்டுச் சென்றதைக் கண்டித்து இலங்கையால் 10-வது'லோ ஏசியா மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை பாகிஸ்தான் உட்பட சகல நாடுகளும் எதிர்த்து வாக்களித்தன.

இந்த மகாநாடு மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் கடந்த வாரம் நடைபெற்றது இலங்கையிலிருந்து 32 பேர் கொண்ட குழுவும் இதில் கலந்து கொண்டது.

மேற்படி மகாநாட்டில் இலங்கையிலிருந்து சென்ற குழுவினர், யாழ். குடாநாட்டுக்குள் இந்திய விமானங்கள் அத்துமீறி நிவாரண உதவிப்

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பான்சி குட்ஸ் சீமாட்டி 158, நவீனசந்தை யாழ்ப்பாணம். [சி 9750]

சிங்கர் Zig Zag தையல் மெஷின் தமிழ் தட்டச்சு யந்திரம் உடன் விற்பனைக்குண்டு 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-9763

பிடவை சீமாட்டி 531, பலாலி ரோட், திருநெல்வேலி, யாழ். பல்கலைக்கழக அருகாமையில் [சி9751]

தமிழ் Remington Standard, ஆங்கிலம் Portable Olymbia, Obtima தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. Fudo Enterprises, Jaffna Road, Manipay. சி-9787

Broilers இறைச்சிக்கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்டர், Nallur Farm Center, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [சி-9681]

சகல விதமான திருமணப் பட்டுப் பிடவைகளுக்கும், றெடிமேட் ஆடைகளுக்கும், நம்பிக்கையான ஸ்தாபனம் கணேசன் ஸ்ரோர்ஸ், இல 11, கஸ்தூரியார் லேன், [கன்னு திட்டிக்கு அருகாமையில்] யாழ்ப்பாணம். ஏ-1904

### ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி



கோவிலாக்கண்டி
செல்வன்
சிவசுப்பிரமணியம்
சாந்திநிகேதன்
(சாந்தன்)

மண்ணகம்; 03-02-1955
விண்ணகம்: 29-06-1980
திதி: பிரதமை-11-7-1987

கண்ணெனத் திகழ்ந்த செல்வா!
சாந்திநிகேதா! நீதான்
விண்ணினை அடைந்தே ஆண்டு
ஏழுதான் சென்றிட்டாலும்
மண்ணிடை நின்னை நாங்கள்
மறந்திடல் இயலுமாமோ?
எண்ணரும் குணங்கள் கொண்டோய்
எம் குலத்தெய்வம் ஆனாய்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

தந்தை, தாயார்,
...த்தை, சகோதர, சகோ...ரிகள், மைத்துனர்,
...த்துனி, மகள்-சிவ...பி, மருமக்கள்:
...ரூபி, சொரூபன்,
...கவிநாயகன், உற்றார்,
...ினர், நண்பர்கள்.
...நேசன்,
...ன்மார்கட்டு.
(சி 9779)

## விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள Honda 200 Bentley மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைகுண்டு [உரிமையாளர் வெளிநாடு செல்வதால்] தொடர்பு கொள்ளவும்: பாலேந்திரக் குமார்/அன்ரன், அரசடி வீதி, பண்டத்தரிப்பு சி-9792

சகலவிதமான பாவித்த வீட்டுத் தளபாடங்கள் தேக்கு கட்டில், சோகேஸ் மெத்தைகள், அல்மாரி, தையல்மெஷின், கசற் றேடியோ, பித்தளைப் பொருள்கள், சாப்பாட்டு மேசை. Rice Cooker, ஹோல் செற், Office மேசை, Dressing Table சாதாரண மேசைகள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி-9764]

35 M.M. கமரா lens [Wide-angle-Tele) B S A Bantma minor (Standard Bore-Piston), இரட்டை அடுக்குக் கட்டில், T. V Case Stand, காமோறி இனபாஸ் ஆடு இரண்டாம் ஈத்து, தொடர்பு கொள்க சபாநாயகம், 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். சி-9771

உரித்த புரொயிலர் கோழி இறைச்சி, கறிக்கோழி இறைச்சி, பன்றிஇறைச்சி [பண்ணையில் வளர்க்கப்பட்டது] என்பனவற்றை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேடகழிவுகள் வழங்கபபடும். வரணி மிசன் விற்னை நிலையம், 145, நவீன சந்தை, யாழ்ப்பாணம் சி-9778

## கல்வி

Graduate Teachers Training மூன்றுவருட பட்டதாரி ஆசிரியர் பயிற்சி [வெளிவாரி பல்கலைக்கழக சான்றிதழும் கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படும்]. தகைமைகள்: க. பொ. த. [உயர்தரம்] 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலதிகவிபரங்களுக்கு காரியாலயத்துடன் 31-07-87 இற்கு முன் தொடர்பு கொள்ளவும் அதிபர், உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சி-9769

### பல்கலைக்கழக அனுமதி
(வெளிவாரி)

### கல்வியாண்டு 1988/89

பேராதனை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கொழும்பு பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப்பட்டப் பாடநெறிகளான

★ கலைமாணி—B.A
★ விஞ்ஞானமாணி—B.Sc.
★ சட்டமாணி—L.L B.
★ வணிகமாணி B.Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
அல்லது
பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 31-07-87**

| கிளை: | உதவிப் பதிவாளர், |
|---|---|
| பட்டப் படிப்புகள் கல்லூரி, | பட்டப் படிப்புகள் கல்லூரி, |
| 225/2, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். | 148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |

[சி-9781]

# இடமாற்றம் பெற்று வந்துள்ள ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, கோப்பாய், மானிப்பாய், வட்டுக்கோட்டை காங்கேசன்துறை, தீவுப்பகுதி, உடுப்பிட்டி ஆகிய கல்வி வட்டாரங்களில் இம்மாதம் 1-ம் தேதி முதல் இடமாற்றம் பெற்று வந்துள்ள ஆசிரியர் விபரம் வருமாறு:

எஸ். சண்முககுமார் [விசுவமடு அ. த வி) பயி விஞ்ஞானம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம். எஸ். சண்முககுலகுமாரன் (புதுக்குடியிருப்பு ம. ம.) பயி. விஞ்ஞானம்-சுன்னாகம் மயிலணி வித்தியாலயம். செல்வி கே. மல்லிகா மலர் மாங்குளம் த. வி) பயி. மனைவியியல் ஏழாலை சைவமகாஜன வித்தியாசாலை.

செல்வி எஸ். இராஜாமணி (குமிழமுனை அ. த. க. பா] பயி கணிதம் சிறுப்பிட்டி அரசினர் தமிழ் வித்தி. எஸ் உமாகாந்தன் [வள்ளுவர்புரம் அ. த க. பா] பயி கணிதம் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். என். தனபாலன் [விஸ்வமடு அ. த. க. பா] பயி. விஞ்ஞானம் - கரம்பன் சிறிய புஷ்ப கன்னியர் மடம். செல்வி கே சிதம்பரபிள்ளை [முள்ளிவாய்க்கால் மேற்கு தமிழ் கனிட்ட வீதி] பயி. மனையியல் இமையாணன் அ த க. வி. இந்திரன் [விஸ்வமடு அ. த. க. பா] பயி. கணிதம் - கலாநிதி தியாகராசா ம. வி. ஆர். ஜே. மரியநாயகம் [தருமபுரம் இல. 2 அ. த. க ] பயி. மனையியல் வேம்படி மகளிர் கல்லூரி. திருமதி ஐ. சுபாஸ்கரன் [பரந்தன் இந்து ம. வி ] பயி. விஞ்ஞானம் [இணுவில் அ. மி. த. க. பாடசாலை. கே. எஸ். கே. நவரத்தினம் [பளை றோ. க. த க] ஆரம்ப பயிற்சி வரணி ம. வி திருமதி கே. கணேசன் [கனகபுரம் அ. த. க. பா] ஆரம்பபயிற்சி கைதடி நுணுவில் அ த. க. பா] ஆர். பாலசந்திரன் [முருகானந்த ஆரம்ப பாடசாலை. பயி, விஞ்ஞானம் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை என். நவரத்தினராசா [ஆனையிறவு அ த க ] பயி. விஞ்ஞானம் உயரப்புலம் ம. வி எஸ். ஜெயசோதிநாதன் [கல்வெடித்திடல் நாகேஸ்வர வித்தி] பயி, சமூக கல்வி கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை. எஸ். துரைராசா [அக்கராயன் ம. வி. கொத்தணி அதிபர்] பயி. ஆங்கிலம் வரணி ம. வி [அத பதவி]. எஸ் கணேசலிங்கம் [கனிஷ்ட ம வி. கிளிநொச்சி] பயி. ஆங்கிலம் கனகரட்னம் ம. ம. வி. கே நவரட்ணராசா [சின்ன அடம்பன் அ. த. க. பா] பயி. விஞ்ஞானம் நாவாந்துறை றோ க த. க. திருமதி எஸ் விஸ்வலிங்கம் பெரியதம்பனை அ. த. க. பா பயி தமிழ் அருணோதயா கல்லூரி. ஏ. சிறீகரன் [கரப்புக்குத்தி தமிழ் வி.] ஆரம்ப பயிற்சி கரம்பைக் குறிச்சி அ த. க. பா. செல்வி எஸ். கதிர்காமநாதன் புளியங்குளம் அ த க. பா] ஆரம்பபயிற்சி கோப்பாய் தெற்கு றோ. க. த. க.] ஏ சி. சண்முகலிங்கம் (நுவரேலியா றஸ்க் புறாக் அ. த. க பா] பயி. இந்து சமயம் தாவடி இந்து ம வி. திருமதி ஏ. சீ. வின்சன்ட் (ருகலை தமிழ் வித்) பயி. கிறிஸ்தவ சமயம் - புனித ஜேம்ஸ் த. ம. வி. (பொன்) ரி நவரட்ணம் (பசறை பாரதி வித்) விவசாய பயிற்சி சுன்னாகம் மயிலணி வித்தி. திருமதி எஸ். நவரத்தினம் (பசறை பாரதி வித்தி] ஆரம்ப பயிற்சி மல்லாகம் கனிஷ்ட வித்தி. செல்வி எம். அந்தோனிப்பிள்ளை (பண்டாரவளை த. வி] ஆரம்ப பயிற்சி -மாதகல் மேற்கு அ. த. க பா. பி. அருள்தாய் (தெஹறன கந்து தமிழ் வித்) ஆரம்ப பயிற்சி - வரணி மகா வித்தியாலயம். ரி. வல்லிபுரம் [காவத்தை த. வி] பயி கணிதம் - கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி. திருமதி வி. சச்சிதானந்தம் [கொழும்பு தொண்டர் ம. வி) பயி மனையியல் - இணுவில் சைவமகாஜன கல்லூரி. கே. கனகசபாபதி (மன்னார் புனித அன்னம்மாள் ம வி.) பயி. உடற்கல்வி இணுவில் சைவப்பிரகாச ம. வி. திங்கள் - புதன் - வெள்ளி) உடுவில் முருகமூர்த்தி வித்தி- (செவ்வாய்-வியாழன்) செல்வி சி. சிவசம்பு [மன்னார் பரப்பான்கண்டல் றோ. க த.க.). பயி விஞ்ஞானம்- கதீஜா மகா வித்தி எஸ் சிறீஸ்கந்தராசா [முத்தையன்கட்டு. அ. த.க ] பயி சமூக கல்வி-கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி. வி. ராயசேகரன் [காட்டகஸ்திகிலியா முஸ்லிம் வித்தி ] பயி. கணிதம்-மகாஜன கல்லூரி-தெல்லிப்பழை. செல்வி எஸ். சபாரத்தினம் [திருமலை மெதடிஸ் மகளிர்கல்லூரி]பயி கணிதம்- சைவப்பிரகாச வித்தி. தெல்லிப்பழை. எஸ். சிவலிங்கம் [கும்புறுப்பிட்டிய முஸ்லிம் த. க .பா.]. ஆரம்ப பயிற்சி யாழ். இந்து ஆரம்ப பாடசாலை [ஆண்]. எஸ். வி. மகேந்திரன் [வந்தாறுமூலை ம. ம வி.]. பயி: கணிதம்- கொக்குவில் இந்துக் கல்லூரி [உடுவில் நிருபர்.]

## பயிற்சி

ரெலிவிஷன், வீடியோடெக்னிப்பியறிங் எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங் பயிற்சிகள் கூடியநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 13 - 07 - 87 Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். சி-9761

## தேவை

ஜென்ஸ் ரெயிலரிங் வேலையில் அனுபவமுள்ள ரெய்லர்கள் தேவை. பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். ஜெகபதி காம் ரெச்ஸ், மானிப்பாய், அந்தோனியார் கோவிலடி. சி-9777

அனுபவம் உள்ள வானொலிப் பெட்டிகள் பழுது பார்க்கும் தொழில்நுட்ப வல்லுநர்கள் [Technicians] தேவை இவர்கள் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரைக்குள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். "ரெலிக் கோணர்", நவீன சந்தை, சாவகச்சேரி. (சி—9765)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



செல்வன் ப காந்தன்

தோற்றம்: 29-05-1965
மறைவு: 10-06-1987

எண்ணத்தில் நாம் வரைந்த ஓவியமே
'காந்தன்'
இதயத்தில் எழுதிவைத்த காவியமே
வண்ணத்து பூச்சியாய் எமைச் சுற்றி வலம் வந்தாய்
கண்ணுக்குத்தெரியாமல் காணுமல் போய்விட்டாய்
மழலைகள் பேசும்போது குழந்தையாய் நீ தெரிவாய்
மனம் நொந்து நாமிருந்தால் மேதாவியாய் வருவாய்
அளவிலா அன்புத் தொல்லை தருகின்ற உனைப் பிரிந்து
அழுகிறோமே எமக்கு ஆறுதல் சொல்லுவாயா?

அம்மா, அக்கா,
தம்பி, தங்கை,
உறவினர்கள்.

பழம்றோட்,
ஆனைக்கோட்டை.
(சி-9773)

## நாளை 'தியாகங்கள்'

யாழ்ப்பாணம், சனி

இணுவில் மக்கள் கலை அரங்கம் தயாரித்துள்ள 'தியாகங்கள், வீடியோப்பட வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணியளவில் இணுவிலில் நடைபெறவுள்ளது.

இன்றைய பிரச்னைகளைமையமாக வைத்து, நம் நாட்டு கலை, கலாசாரங்களை வளர்க்கும் நோக்கமாக எமது கைதேர்ந்த கலைஞர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது இந்த 'தியாகங்கள், வீடியோப்படம். (மா)

## நல்லையில் கம்பன் விழா

யாழ்ப்பாணம், சனி

'கம்பன் விழா'வை இம்மாத நடுப்பகுதியில் நடாத்துவதற்கு யாழ். கமலன் கழகத்தினர் முடிவு செய்துள்ளனர்.

நல்லை ஆதீனத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவுக்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடித்து விட்டதாக கழக முக்கியஸ்தர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

தமிழ் மக்களின் இன்றைய போராட்ட சூழ் நிலையை மையமாகக் கொண்டு கம்பன் விழா நிகழ்ச்சிகளை நடத்தி முடிக்க தாம் உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (மா)

பம்பாய் விமான நிலையத்தில்

# 30 கோடி ரூபா பெறுமதியான ‘ஹஷிஸ்’ கடத்தல் முறியடிப்பு!

## -- கடத்தல்காரர் கைது

புதுடில்லி ஜூலை, 10 பம்பாயிலிருந்து வெளி நாடொன்றுக்கு சுமார் 30 கோடி ரூபா பெறுமதியான நாலரை தொன் ‘ஹஷிஸ்’ போதைப் பொருளை கடத்த முயன்ற கும்பலொன்றை பம்பாய் போதைபபொருள் தடுப்புப்பிரிவு பொலிஸார் பிடித்துள்ளனர்.

பம்பாய் விமான நிலையத்தில் நேற்றுக்காலை ஆறு பெட்டிகளில் இவற்றை மறைத்துக் கொண்டு வந்த இக்கும்பலின் நடவடிக்கையில் சந்தேகப்பட்ட பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தி பெட்டிகளை பலத்த சோதனையிட்டபோது இவை கண்டுதடிக்கப்பட்டன.

இதுதொடர்பாக காமநாட்டவர்கள் இருவரும் இந்தியர் ஒருவரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இக்கும்பலைச் சேர்ந்த பலர் தப்பிவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வெளிநாடொன்றிற்கு கடத்தப்படும் இப்போதைப் பொருள் அங்கிருந்து பலநாடுகளுக்கும் அனுப்பப்படவிருந்ததாகவும் இவற்றின் பின்னணியில் முக்கிய பிரமுகர்கள் பலர் இருப்பதாகவும் இது தொடர்பான விசாரணைகள் தற்போது இடம் பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### மதுரையில்

மதுரையில் வெளிநாட்டு முத்திரைகளைக் கொண்ட 25 லட்சம் ரூபா பெறுமதியுள்ள தங்கக்கட்டி கடத்தலை சுங்க அதிகாரிகள் முறியடித்துள்ளனர். நாலுபேர் இது தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். (சி)

இன்று பிறக்கும் குழந்தையுடன்

# உலகின் சனத்தொகை 500 கோடியாகிறது

ஜெனிவா ஜூலை 10 உலக சனத்தொகையை 500 கோடியாக உயர்த்தும் பெருமையை பெறும் குழந்தை இன்று சனிக்கிழமை உலகின் எங்கோ ஒருபகுதியில் பிறக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைக் குறிக்கும்முகமாக உலகின் பல பாகங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது 1820ல் 100 கோடியாக இருந்த சனத்தொகை 1920ல 200 கோடியாகவும் 1960ல் 300 கோடியாகவும் 1974ல் 400 கோடியாகவும் 1987ல் [இன்று] 500கோடியாகவும் உயர்கிறது.

நிமிடத்திற்கு 40 குழந்தைகள் என்றவிகிதத்தில் நாளாந்தம் 2 லட்சத்து 20,000 குழந்தைகள் என்ற வீதத்திலும் உலகின் சனததொகை பெருக்கம் அதிகரித்து வருகிறது. உலகின் வருடாந்த சனத்தொகைப் பெருக்கம் 8கோடியாகும்.

இன்று 500 கோடியாக உயரும் சனத்தொகைப்பெருக்கம் 1999ல் 600 கோடியாகவும் 2010ல் 700 கோடியாகவும் அதிகரிக்கும். குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் இந்தியா, பாகிஸ்தான், மெக்ஸிகோ, பிறேசில், நைஜீரியாவில் கடந்த சில வருடங்களில் சனப்பெருக்கம் பல மடங்காக அதிகரித்துள்ளது.

அதிகரிக்கும் 500 கோடி மக்களில் சுமார் 80 கோடி மக்கள் போதிய உணவின்றியும்ஏனைய அடிப்படை வசதிகளின்றியும் அல்லல்பட்டுவருகின்றனர்என ஐ.நாவின் சுற்றுடல் அபிவிருத்திட்பிரிவு தெரிவித்துள்ளது. (சி)

உலகச் செய்திகள்

வடபகுதி அகதிகளுக்கென

# சர்வோதயம் 2-ம் கட்ட உணப்பொருள் அனுப்பியது

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டத்தில் ராணுவ நடவடிக்கை காரணமாக அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு வழங்கவென சர்வோதய சிரமதான இயக்கம் 2ம் கட்ட உணவுப் பொருள்களை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்துள்ளது.

4 லொறிகளில் அரிசி மா, சீனி, பால்மா, தேங்காய் ஆகிய உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் இவை வடமராட்சி, தென்மராட்சி, வலி மேற்கு, வலி வடக்கு, வலி கிழக்கு ஆகிய இடங்களிலுள்ள அகதி முகாம்களுக்கு விநியோகிக்கப் படுமெனவும் சர்வோதய வெளிக்கள இயக்குநர் திரு. கி. சிவசுப்பிரமணியம் ‘ஈழநாடு’வுக்குத் தெரிவித்துள்ளார்.

சர்வோதய இயக்கம் ஏற்கனவே வடபகுதிக்கென 5 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை வழங்கியிருந்தது. [ஊ]

வளைகுடாப் பகுதியில்

# அமெரிக்கஎண்ணைக் கப்பலை ஈரானிய யுத்தக்கப்பல் தாக்கியது

வாஷிங்டன் ஜூலை 10 வளைகுடாப் பகுதியில்சென்ற அமெரிக்க எண்ணைக் கப்பல் ஒன்று நேற்று ஈரானிய யுத்தக்கப்பலின் தாக்குதலுக்கிலக்காகி பலத்த சேதமடைந்துள்ளது இப்பகுதியில் அமெரிக்க எண்ணைக்கப்பலொன்று தாக்கப்பட்டது இதுவே முதல் தடவை.

வளைகுடாவில் செல்லும் அமெரிக்க யுத்தக் கப்பல்களுக்கும் சரக்குக் கப்பல்களுக்கும் அது யுத்த விமான பாதுகாப்பு அளித்து வந்தபோதும் ஈரானிய யுத்தக்கப்பலின் தாக்குதலுக்கிலக்காகியது குறிப்பிடத்தக்கது.

ஈரான்-ஈராக் யுத்தத்தை தொடர்ந்து இடபகுதியில் செல்லும் கப்பல்கள் தாக்கப்பட்டுவந்தன. இதையடுத்து பலநாடுகள் அமெரிக்க சோவியத் கொடிகளுடன் பாதுகாப்பாக சென்றபோதிலும் அமெரிக்க கொடியுடன் செல்லும் கப்பல்கள் தாக்கப்பட்டு வந்தன.

இந்த நடவடிக்கையால் ஆத்திரமடைந்த அமெரிக்கா ஈரானுக்கு பலதடவைகள் எச்சரிக்கை விடுத்திருந்தபோதும் ஈரான் அதனை அலட்சியம் செய்து நேற்று இவ் எண்ணைக் கப்பலை தாக்கியது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன் அமெரிக்க யுத்தக் கப்பல் ஒன்றும் தாக்கப்பட்டு அதில் 37 அமெரிக்கர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (சி)

அராபிக் கடலில் இந்திய

# சரக்குக்கப்பல் மூழ்கியதில் 19 ஊழியரை காணவில்லை

(சென்னை)

இந்திய சரக்குக் கப்பலொன்று ரத்தின கிரிக்கு அப்பால் அராபிக்கடலில் மூழ்கியதில் அதில் சென்ற 19 ஊழியர்கள் காணமல் போய்விட்டனர். தலைமை அதிகாரி உட்பட நால்வர் உயிர்தப்பினர்.

பம்பாயிலிருந்து 5000தொன் உப்பை ஏற்றிக் கொண்டு சென்னை வந்த இந்க எம். வி. ‘அவாமிதி’ என்ற சரக்குக் கப்பல் திடீரென பம்பாயுடனான தகவல் தொடர்பை இழந்ததாம்.

இதனையடுத்து உடனடியாக அபபகுதிக்கு விரைந்த தேடுதல் விமானங்கள் சரக்குக் கப்பலைக்காணவில்லையாம். சம்பவம் நடைபெற்று பல மணி நேரங்களின் பின் கப்பலின் தலைமை அதிகாரியும் நான்கு ஊழியர்களும் நீந்திக் கரை சேர்ந்தனர். கப்பலிருந்த ஏனைய 19 பேரையும் தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. (சி)

## 2-ம் உலகப்போரில் மூழ்கிய கப்பல்

[சென்னை]

இரண்டாம் உலகப் போரில் தனுஷ்கோடிக்கருகில் கடலில் மூழ்கிய இந்திய கடற்படை கப்பலினைகண்டுபிடிக்கும்முயற்சியில் தஞ்சாவூர் பல்கலைக்கழக ஆழ்கடல் அகழ்வாராய்ச்சி மையம் ஈடுபடவுள்ளது.

கடந்த 5 வருடத்திற்குமுன் ‚டேராடூனி’லுள்ள இந்திய நீயல் துறை ஆராய்ந்து கப்பல் மூழ்கியிருக்குமிடத்தை குறிப்பிட்டிருந்தது. (சி)

பஞ்சாப்பில் தொடரும் வன்முறை

## 7 சீக்கியர் 6 இந்துக்கள் சுட்டுக் கொலை

புதுடில்லி ஜூலை 10 பஞ்சாப் மாநிலத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு சம்பவத்தில் ஏழு சீக்கியர் உட்பட 13 பேர் சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் முன்னாள் அமைச்சர்.

பரித்பூர் மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் திரு சுக்மிந்தர் சிங்கையும் அவர் குடும்பத்தைசேர்ந்த நான்கு பேரையும் மெய்ப்பாதுகாவலரையும் அவர்கள் வீட்டில் வைத்து படுகொலை செய்தனர். மற்றொரு சம்பவத்தில் அகாலிதள் லொங்கோவாள் பிரிவு தலைவர் திரு ஜக்பிந்தர் சிங் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அம்ரிஸ்தர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் அதிகாலை வீட்டில் நித்திரையிலிருந்த காங்கிரஸ் (ஐ) கட்சி முக்கிய உறுப்பினர் ஒருவரையும் முன்னாள் அமைச்சர் உட்பட ஐவரையும் தீவிரவாதிகள் சுட்டுச் கொன்றனர். (சி)

வேறிடங்களில் தஞ்சமடைந்தவர்களுக்கு

# இந்தியநிவாரணபொருள்கள் விரைவாக கிடைக்க வேண்டும்

யாழ்ப்பாணம், சனி

“இராணுவ நடவடிக்கைகளினல் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறி வேறிடங்களில் தஞ்சமடைந்த மக்களுக்கு அடுத்தகட்டமாக இந்திய நிவாரணப் பொருள்கள் விரைவாககிடைக்க வழிசெய்ய வேண்டும்’’ என்று யாழ். தேசியகூட்டுறவுச்சபைதலைவர் சிவமகாராசா யாழ் அரசாங்க அதிபருக்கு எழுதியகடிதமொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்துவெளியேறிய மக்களின் அட்டவணையொன்றை பாதிக்கப்பட்டகிராமங்களின் கிராம சேவையாளர்கள், பிரஜைகள் குழுக்கள், செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கங்களைப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழுமூலம் தயாரித்து உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் அமைக்கப்பட்ட நிவாரணக் குழுவின்அங்கீகாரத்துடன் அந்தந்தப்பகுதிபல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விரைவாகக் கொடுக்க நடவடிக்கைஎடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இவ்வாறு அட்டவணை தயாரித்து நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும்போது தவறுகள் நிகழுவதற்கு இடமிருக்

(7-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

உன் சொற்களைப் பார்க்கிலும் உன் நடத்தையை உன் மக்கள் பின்பற்றுவார்கள்.

— பெஞ்சமின் பிராங்க்ளின்

# நமதுநோக்கு

## திருமலை நகரசபை தேர்தல்

திருகோணமலை நகர சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அனைவருமே போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தி பலவிதமான சிந்தனைகளை தோற்றுவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல்களையும் பிரதேச சபைத் தேர்தல்களையும் ஐந்து எதிர்க் கட்சிகள் பகிஷ்கரிப்பதாக அறிவித்துள்ளன. இந்த ஐந்து கட்சிக் கூட்டமைப்பில் சேர்ந்துகொள்ளாத சமசமாஜக் கட்சிக்கு தமிழ் பகுதிகளில் போதிய செல்வாக்கில்லாதிருப்பதால் அல்லது திருகோணமலைப் பகுதி உள்ளூர் அரசியலில் அக்கறையின்மையால் அல்லது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குப் போன்று போதிய பாதுகாப்பின்மையால் போட்டிக்கு எவரையும்நியமிக்கஅக்கட்சி முன்வரவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியும் அ. இ. தமிழ் காங்கிரஸ் கட்சியும் போட்டியிடுவதைப் பற்றியே சிந்திக்கமுடியாது

இந்நிலையில் முழுக்கவும் சிங்களவர்களையும் ஓரிரு முஸ்லிம்களையும் கொண்ட ஒரு பட்டியலைத் தாக்கல் செய்து ஐ தே. கட்சியினர் திருகோணமலை நகரசபையில் போட்டியின்றித் தெரிவாகி இருக்கிருர்கள்.

சாதாரண காலங்களில் என்ருல் ஜனநாயக முறையில் மக்கள் ஆதரவை அபரிமிதமாக பெற்றுள்ள ஒரு அரசியல் கட்சிக்கு இப்படியாக வெற்றி கிடைப்பது சாத்தியமாகலாம்- அப்படியான சாத்தியமிருந்தாலும் போட்டியின்றிவெற்றிபெறுவதற்கு ஏனையவர்கள் விடவும் மாட்டார்கள்.

அப்படிப் பார்க்கையில் கடந்த காலங்களில் திருகோணமலை நகரசபை தமிழ்ப் பிரமுகர்களின் தலைமையிலே பெரும்பாலும் இயங்கிவந்துள்ளது. பிரதான துறைமுக நகரம் என்பதால் சகல சமூகத்தினரும் வாழும் இடமாகும் திருமலை. அதனுல் நகரின் செயற்பாட்டில் சகல பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டுமென்ற நிலைமையும்' இருந்தது. இருந்தாலும் சபையின் அதிகாரம தமிழ் பிரதிநிதிகளின்கைகளிலேயேஇருந்து வந்தது.

திருகோணமலைப் பிரதேசம் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற நிலையை மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுவந்துள்ள அரசியல் இராணுவ நடவடிக்கைகளின் பிரதிபலிப்பே இன்று தமிழர் எவரும் உறுப்பினர்களாக இல்லாத வகையில் அங்கு நகர சபையொன்று உருவாகியிருக்கும் நிலையாகும்.

பொதுவில் தமிழ்ப் பிரதேசங்களில் அவசரகால சட்டத்தின்கீழ் முப்படைகளும் முற்றுகையிட்டு தேடுதல்களிலும் தாக்குதல்களிலும், அழிப்புவேலைகளிலும் படுகொலைகளிலும் ஈடுபட்டிருக்கும் அசாதாரணமான இந்தக் கால கட்டத்தில், அதாவது வடக்கு கிழக்கில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் ஆயுதப்படைகளுக்குமிடையில் போராட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அரசியல் கட்சிகளின் போட்டா போட்டிக்கு இடம் தருவதான தேர்தல்கள் எந்த விதத்திலும் அவசியப்படுவதாக நாம் கருதவில்லை. மக்கள் முதலில் அமைதியாக இருக்கவேண்டும். ஆறஅமர அவர்கள் இருந்து சிந்திப்பதற்கு சந்தர்ப்பம் இருக்க வேண்டும்.

ஆனுல் வடக்கிலோ கிழக்கிலோ அந்த நிலைமை உருவாவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. குறிப்பாக திருகோணமலையில் மக்கள் என்ன நிலையில் வாழ்கிருர்கள்?

சிங்களவர்களோ தமிழர்களோ மற்றவர்களோ அமைதியாக பயமின்றி வாழ்கிருர்கள் என்று புத்தி சுவாதீனமுள்ள எந்த மனிதனும் கூறிடமாட்டான். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் கூட போட்டியின்றி தெரிவாகியிருக்கிருர்கள் என்று கூறப்பட்டாலும் இராணுவத்தின் பாதுகாப்பு அவர்களுக்கு நிரந்தரமாகத் தேவைப்படும். அப்பிரதேசம் இராணுவப் பிரதேசமாகவே மாறிவிட்டிருக்கின்றது.

சமீபகால நடவடிக்கைகளில் திருகோணமலையையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் சேர்ந்த தமிழ் மக்கள், ஏன் சிங்களவர்களும் கூட வசித்த இடங்களை விடுத்து பாதுகாப்பான பகுதிகளுக்கு நகர்ந்துவிட்டார்கள். இவ்வாறு திரும்பிச் சென்ற சிங்கள மக்களுக்கு பலவிதமான பாதுகாப்புகளையும் சில சமயம் ஆயுதங்களையும் வழங்கி அரசு மீண்டும் பழைய இடங்களுக்கு அனுப்பிவருகின்றது

வெளிமாவட்டங்களுக்குத் தப்பி ஓடியிருக்கும் தமிழ் மக்கள் இன்னமும் திரும்பிச் சென்று அமைதியாக வாழக்கூடிய நிலைமை உருவாகவில்லை. இந்நிலையில் இப்பகுதிகளில் தேர்தல்களை நடத்த எடுக்கும் முயற்சிகள் அர்த்த மற்றவை.

திருகோணமலையில் நடக்கும் நகர சபைத் தேர்தல் இதனையே பறைசாற்றுகின்றது.

பல்கலைக் கழக

## மாணவர்கள் கைதாகின்றனர் தினேஷ் கவலை

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்தின் கொள்கைக்கு மாருனவர்களென குற்றம் சுமத்தி பல்கலைக் கழக மாணவர்கள் கைதுசெய்யப்படுகிருர்கள் என்று மஹரகம எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் பேசுகையில் கவலை தெரிவித்துள்ளார்.

பல்கலைக் களகங்களுக்குள்ளும் அரச உளவாளிகள் கடமையாற்றுகின்றனர் எனவும் இதற்காக உளவுச் சேவையினருக்கு வேதனமும் வழங்கப்படுகிறதென்று திரு. குணவர்த்தன தெரிவித்தார்.

# 'படையினரால் எட்டு பேர் வெட்டப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டனர்''

## வடமராட்சி கொடுமைகள் பற்றி ஆசிரியை

வடமராட்சிப்பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கானமக்கள்தமது இருப்பிடங்களை வெளிவிட்டு யேறி பாதுகாப்பான இடங்களுக்கு மீண்டும் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில்பெரும்பாலானவர்கள் தென்மராட்சி பகுதியிலே தஞ்சம்புகுந்துவருகின்றனர்.

வடமராட்சிநிலைமை தொடர்பாக இவர்களுடன் உரையாடியபோது பல தகவல்களை பெறக்கூடியதாக இருந்தது.

''வடமராட்சி நிலைமை இப்பொழுது எப்படியிருக்கிறது'' அகதியாக வந்திருக்கும் வடமராட்சியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் என்பவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

பல லட்சம் ரூபா பெறுமதியான எனது வீடு உடைக்கப்பட்டதை நினைத்தோ எனது சொத்துக்கள் சூறையாடப்பட்டதைப் பற்றியோ எனது உறவினர்கள் இறந்தது பற்றியோ நான் இனிக் கவலைப்படமாட்டேன். அங்குநிலைமை மாறிவிட்டது மகிழ்ச்சியளிக்கிறது என்ருர்.

அன்பாலயம் என்னும் பகுதியைச் சேர்ந்த இளம் ஆசிரியை ஒருவர் சோகமே உருவாக வந்தார்.

இவர் வடமராட்சியில் நடந்த 'ஒபரேசன் லிபரேசன்' பற்றிப் பல புதிய தகவல்களைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

### வறுமையின்பிடியில் சிக்கியுள்ளோம்

எமதுபகுதியில் நடந்த ஒபரேசன் லிபரேசனின் போது இராணுவத்தினர் பல பெண்களை இம்சைப்படுத்தியுள்ளதுடன் சுட்டும் கொன்றுமுள்ளார்கள். எமது பகுதியைச் சுற்றி முகாம் அமைத்துக் கொண்ட இராணுவத்தினர் தினமும் எமது மக்களைசித்திரவதைசெய்தார்கள்.ஒரு நாள் எங்களது வீட்டிற்குவந்த சிப்பாய்கள் என்னை தங்களுடன் வரும்படி கையில் பிடித்திழுத்தார்கள். நான் மறுப்பு தெரிவித்தபொழுது 'பெண்கொட்டியா' என்று கூறி பலாத்காரமாக என்னைத்தூக்குவதற்கு முயன்றபொழுது அங்கு இராணுவகொமாண்டர் ஒருவர் வந்ததால்தப்பினேன் என்ருர்.

பல பெண்கள் சிப்பாய்களால் அழைத்துச் செல்லப்பட்டார்கள் அவர்களுக்கு இது வரை என்ன நடந்திருக்குமோ தெரியாதுஎன்று அவர்மேலும் கூறினர்.

### ஆண்களே இல்லை

என்னுடைய அப்பா கடந்த ஏப்ரல் 20ம் திகதி புத்தூர்பகுதிக்கு வேலைக்குச் சென்று வருவதாகக் கூறிச்சென்றவர் இது வரையும் வீடுதிரும்பவில்லை.

என்னுடைய குடும்பத்தில் மட்டும் அப்பா, அண்ணு, ஐந்து மாமன்மார்கள் உட்பட ஏழு பேர்பற்றியதகவல் இது வரைக்கும் எமக்கு கிடைக்கவில்லை.

வசதியாக வாழ்ந்த எமது குடும்பம் வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கிறது. எமது இருவீடுகள் தீயிடப்பட்டுள்ளன. லட்சக்கணக்கான பொருள்கள் எரிந்து சேதமாகியுள்ளன. எமது குடும்பத்தில் இப்பொழுது ஆண்களே இல்லை. எமது அன்பாலய சன சமூக நிலைய தலைவர் உட்பட நல்லதம்பி இராசதுரை, நல்லதம்பி தங்கத்துரை, நல்லதம்பி தங்கமுத்து, வேலுப்பிள்ளை நல்லதம்பி,(இவர்கள்ஒருகுடும்பத்தைசேர்ந்ததாய், தகப்பன், பிள்ளைகள்) இளையவி, வேல்முருகன், அப்புக்குட்டி, செல்வராசா, இராமன், கார்த்திகேசு, குஞ்சுப்பிள்ளை, ஆகிய எமது கிராமமக்கள்ஏப்ரல்29ம்

**என். கே. துரைசிங்கம்**

திகதி இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர் என்ருர்.

இவர்கள் அனைவரும் எம் கண்முன்னுலே கை, கால்கள் வெட்டப்பட்டும் பல சித்திர வதைகள் செய்யப்பட்டு உயிரோடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர். திரும்பவும் ஏப்ரல் 30ம் திகதி இதே இடத்தில் பத்து பேர்சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இருபத்தெட்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள் என்று அவர் விபரித்தார்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காலிக்கு கொண்டுசெல்லப்பட்டு விடுதலை செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் தனக்கேற்பட்ட அனுபவம்பற்றி கூறியதாவது:

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகச் கொண்ட நான் எமது பகுதி இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டுவிட்டதுஎன்பதையறிந்து அல்வாய் பகுதிக்குச்சென்றேன்.

என்னுடன் பல இளைஞர்களும் பாதுகாப்புத்தேடி அல்வாய்க்கு சென்றுகொண்டிருந்தபொழுது வீதியில் இராணுவம் வருவதாக மக்கள் அங்குமிங்கும் ஓடினுர்கள்.

நாங்கள் சென்றபொழுது அங்கு, இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு திரும்பவும் அந்த வீதியால் வந்தபொழுது வீடு ஒன்று தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. வீட்டிலுள்ளவர்களும் சுடப்பட்டு எரிக்கப்பட்டதாக அறிந்தோம்.

ஆயிரக்கணக்கான இளைஞர்களுடன்கடற்கப்பலில்காலிக்கு கொண்டு செல்லப்பட்டோம்.

ஆறுநாள் கப்பல் பயணம். இந்த பயணத்தின்போதுஒழுங்கான சாப்பாடில்லை. ஆனுல் இராணுவத்தினர் ஒழுங்காக வந்து எம்மைத் தாக்குவார்கள்.

இராணுவத்திடம் பிடிபடுவதை விட அவர்கள் அங்கு சாவது மேல் என்பதை இங்குள்ள நாட்களில் உணரக் கூடியதாக இருந்தது.

விடுதலை செய்யப்பட்டு வடமராட்சியில் உள்ள எனது வீட்டிற்கு வந்த சில நாட்களில் எனது வீடு இராணுவத்தினரால முற்றுகையிடப்பட்டு திரும்பவும் என்னைக் கைது செய்ய இராணுவம்முயன்றது. எனது அம்மாவும் அப்பாவும் நான் காலிக்கு போன விடயத்தை இராணுவத்திடம் கூறி என்னைக்காப்பாற்றினுர்கள்.

### க. பொ. த (உயர்தர) மாணவன் கருத்து

இந்த இளைஞனிடம் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது இன்னெரு இளைஞர் என்னருகே வந்தார்.

''தம்பி வடமராட்சியோ'' என்றேன். ''ஆம்'' என்று கூறிய அவர் தனது கதையை விரிவாகக் கூறினர். ''வடமராட்சியில் கைது செய்யப்பட்டு பூஸா முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட மாணவர்களில் நானும் ஒருவன் முப்பத்திமூன்று நாட்கள் பூஸாவிலிருந்த நான் இராணுவத்தினரால் பல சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டேன்.

இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவுள்ள க. பொ. த உயர்தர பரீட்சைக்கு தோற்ற வேண்டிய மாணவர்களில் நானும் ஒருவன் ஆனுல் இந்த பரீட்சைக்கு என்னுல் தோற்ற முடியாதுள்ளது. என்னைப் போல் பல வடமராட்சி மாணவர்கள் இந்தப் பரீட்சைக்கு தோற்றமாட்டார்கள்'' என்ருர்.

### மாங்காய், தேங்காய் சாப்பிட்டோம்

வடமராட்சியில் தொடர்ச்சியாக நடந்த லிபரேசன் ஒபரேசனின்போது ஐந்து நாட்கள் ஒரு கோயிலில் தஞ்ச

(5ம் பக்கம் பார்க்க)

## பெருந்தொகை யாத்திரிகர்களுடன்

# நயினை அம்மன் ரதோற்சவம்

வேலணை, வெள்ளி

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்ஆலயத்தின் வருடாந்த ரதோற்சவம் கடந்த வியாழக்கிழமை காலை 10மணிக்கு சிறப்பாக நடந்தேறியது.

இவ்வருட உற்சவத்தில் பெருந்தொகையான வெளியூர் யாத்திரிகர்கள் கலந்துகொண்டனர். யாத்திரிகர்களின் வசதி கருதி குறிகாட்டுவான் - நயினுதீவுக்கிடையில் விசேடமான படகுச் சேவைகளும் நடைபெற்றன. குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து படகில் செல்லும் யாத்திரிகர்கள் கடற்படையினரால் அவர்களின் தேசிய அடையாள அட்டையும் அவர்கள் கொண்டு செல்லப்படும் பொதிகளும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே கோவிலடிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆலய வீதிகளிலும் சுற்றுப்புறங்களிலும் படையினர் சீருடையிலும் சீருடை அற்ற நிலையிலும் ஆயுதங்களுடன் யாத்திரிகர்களுடன் ஒன்ருக நின்றனர்.

இவ்வருடம் பிள்ளையாரும், முருகனும் கட்டுத்தேரிலும் அம்மன் வழமையான தேரிலும் வீதியுலாவந்தனர். தேர் பவனியில் பெண்களும் ஆண்களுடன் சேர்ந்து வடம் பிடித்து இழுத்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

வழமைபோல ஆலயமேற்கு வீதியில் நீதிமன்றம், கிராம சேவகர், அபிவிருத்திச்சபையின் உபஅலுவலகம், சுகாதார நிலையம், உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், தொண்டர் சேவைநிலையங்கள் உட்பட பல அரசாங்க அலுவலகங்களும் அமைக்கப்பட்டு சேவைகளை ஆற்றிவந்தன.

நயினுதீவு மகாவித்தியாலய சாரணத்தொண்டர்கள், ஆலயத் தொண்டர்கள், சென் ஜோன் அம்புலன்ஸ்படைத் தொண்டர்கள் ஆகியோர்கள் ஆலய வீதிகளிலும் இறங்கு துறைகளிலும்சிறப்பானமுறையில் தொண்டாற்றி வந்தனர்.

### விசேட பஸ்கள்

யாத்திரிகர்களின் போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டு புங்குடுதீவு போக்குவரத்துச்சங்கம் அராலித்துறை முகத்திலிருந்து குறிகாட்டுவான் இறங்கு துறைவரை விசேட மினிபஸ் சேவைகளை நடத்திவந்ததுடன், உள்ளூர் யாத்திரிகர்களின் வசதிகருதி வேலணைவங்களாவடிச் சந்தி புங்குடுதீவு ஆகிய இடங்களில் இருந்தும் குறுகிய பஸ் சேவைகளை நடாத்திவந்தனர்.

# ஆசிரிய நியமனம் குறித்து கல்விப்பகுதியில் சந்தேகம்

(கொழும்பு)

ஆசிரியர் யமனத்தை அண்மைகாலங்களில் பெற்ற பெரும்பான்மையினத்தவரில் அநேகமானோர் ஜே. வி. பி. இயக்கத்தை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகம் கல்விப்பகுதியினருக்கு தற்போது எழுந்துள்ளது.

எனவே இனிமேல் பெரும்பான்மை இனத்தவரிடமிருந்து பாதுகாப்பு அத்தாட்சி சான்றிதழ் கேட்கப்படவிருக்கிறது. இதுவரை காலமும் வட-கிழக்குப் பகுதியை சேர்ந்தவர்களிடமே பாதுகாப்பு அத்தாட்சி சான்றிதழ் கேட்கப்பட்டு வந்தது.

சில பாடசாலைகளில் தடை செய்யப்பட்ட இயக்கப் போதனைகளைப் பல ஆசிரியர்கள் நடாத்திவருவதாக அறிந்ததை அடுத்தே கல்விப்பகுதியினருக்கு மேற்படி சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

## சண்டிலிப்பாய் உ. அ. அதிபர் பிரிவு

# 21 அகதி முகாம்களில் 2368 பேர் தஞ்சம்

## மேலும் வீடுகளிலும் அகதிகள்

பண்டத்தரிப்பு, நிருபர்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 21 அகதிகள் முகாம்கள் செயற்பட்டு வருவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த அகதிகள் முகாம்களில் 526 குடும்பங்களைச் சேர்ந்த 2368 பேர் தங்கியிருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் இந்தியா அன்பளிப்பு செய்த நிவாரணப் பொருள்கள் வழங்கடபட்டுவருகின்றன.

அதேவேளை உறவினர் வீடுகளிலும், தெரிந்தவர்கள், நண்பர்கள் வீடுகளிலும் பெருந்தொகையானவர்கள் அகதிகளாக தங்கியிருக்கின்றனர். இவர்களுக்கும் இந்திய உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமம் வடக்கைச் சேர்ந்த மாவிட்டபுரம், கீரிமலை, கொல்லங்கலட்டி, காங்கேசன்துறை, தெல்லிப்பழை, ஊறணி, பலாலி, கட்டுவன் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர்பிரிவில் பெருமளவில் அகதிகளாக வந்து தஞ்சமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [மா]

## வடமராட்சியில்

# கூட்டுறவுச் சங்கங்களை சீர்திருத்த ரூ. 120 லட்சம்

(நமது நிருபர்)

வடமராட்சிப் பகுதியில் நான்கு கூட்டுறவுச் சங்கங்களைப்புனரமைப்பதற்கு ஏற்படு செய்யப்பட்டுவருகின்றது. இதற்காக அரசு 120 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அரசாங்க வட்டாரங் தெரிவித்துள்ளன.

இதேசமயம் யாழ். குடாநாட்டில் பல்வேறு இடைஞ்சல்களுக்கும் கொள்ளைகள், சீர்கேடுகளுக்கும் உள்ளாகி வந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு சுமார் 6 கோடி ரூபாய் தேவைப்படுமென யாழ்ப்பாண அரசாங்க அதிப அரசுக்கு மகஜர் மூலம் தெரிவித்திருப்பதாக மேற்படி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## படையினர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்திருந்தோம் இந்த ஐந்து நாட்களும் தேங்காய், சொட்டும் மாங்காய்களுமே எமது சாப்பாடு'' என்று இன்னொருவர் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

இனி எமக்கு பயமில்லை இளைஞர்களின் கட்டுப்பாட்டுக்குள் வடமராட்சி வந்து விட்டால் போதும் நாம் நிம்மதியாக வாழலாம் என்று மேலும் தெரிவித்தார் அவர்.

# வடமராட்சி ஆசிரியர்களின் தஸ்தாவேஜுகள் பாதுகாப்பில்

யாழ்ப்பாணம், சனி.

வடமராட்சியிலுள்ள எழுபத்தாறுபாடசாலையும்சேர்ந்த ஆசிரியர்களின் முக்கிய தஸ்தாவேஜுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் தற்போது செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், இப்பாடசாலைகளிலுள்ள முக்கியமான ஆவணங்களும் பாதுகாக்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (ஒ)

## குரும்பசிட்டி, மயிலிட்டி தெற்கு

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய உணவுப்பொருள்

யாழ்ப்பாணம்.சனி

குரும்பசிட்டி மயிலிட்டி தெற்கு கிராமசேவை அலுவலர்கள் பிரிவில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு வெளியேறிய மக்களுக்கு இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வேறிடங்களில் இந்த நிவாரண உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளாத இப்பகுதி மக்கள் மல்லாகத்திலுள்ள வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உடனடியாகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு மயிலிட்டி தெற்கு பிரஜைகள் குழு கேட்டுள்ளது.

இப்பணிமனையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் குரும்பசிட்டி மக்களும் பிற்பகல் மயிலிட்டிதெற்கு மக்களும் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்வதற்கான ஏற்பாடுகளை பிரஜைகள் குழு மேற்கொண்டுள்ளது. (மா)

# "இனப்பிரச்னை வெளியார் பிரச்னையாக மாறிவருகின்றது''-கலவான எம். பி.

கொழும்பு வெள்ளி

உள்நாட்டு பிரச்னையாகஇருந்தஇனப் பிரச்னை இப்போது வெளியார் பிரச்னையாக மாறி வருகிறது.

கலவான எம். பி. திரு. டி. யூ குணசேகரா பாராளுமன்றத்தில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: அரசாங்கத்தை சேர்ந்த ஒவ்வொருவர் ஒவ்வொரு விதத்தில் பேசுவதனால் ஏற்படும் விளைவை நிதி அமைச்சரும், வெளிநாட்டமைச்சரும், தேசியய பந்தோபஸ்து அமைச்சரும் தாக்கும்நிலை உள்ளது அவர்கள் நாடு நாடாகதிரிந்து நிதி சேகரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இன்று விவசாய அமைச்சர் இந்தியா பற்றி அதிகம் இச்சபையில் பேசினார். ஆனால் அப்பேச்சு எப்படி எதிரொலிக்கப் போகிறதோ தெரியவில்லை.

நாட்டைப் பாதுகாக்கு முன் வாயைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்று சிங்களப்பழமொழி ஒன்றிருக்கிறது.

நாட்டின் எதிர்காலத்தின் பெயரால் சிங்கள முஸ்லிம் தமிழ் மக்கள் சார்பாக கேட்கிறேன். நாட்டுக்குப் பாதகமாகப் பேசுவதை இனியாவது நிறுத்துங்கள். சிலர் இப்படி பேசுவதனால் ஐ. தே. கட்சிக்கும் மட்டும் பாதிப்பு ஏற்படவில்லை. முழுநாட்டிற்கும் பாதிப்பு ஏற்படப்போகிறது. எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கும் பாதிப்பு ஏற்படப்போகிறது.

# ஐலன்பிரைட்டுக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

இந்திய நிவாரணப்பொருள்களுடன் காங்கேசன்துறை இராணுவத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள ''ஐலன்ட் பிரைட்'' உணவுப் பொருள்களை இறக்குவதற்காக துறைமுகத்திற்குள் நேற்றும் அனுமதிக்கப்படவில்லை.

இராணுவத் தளபாடங்களுடன் துறைமுகத்தை வந்தடைந்துள்ள 'பாணந்துறை' என்னும் இலங்கைக் கப்பலில் இருந்து அவை இறக்கப்படுவதாலேயே இந்தியக் கப்பல் துறைமுகத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. (வா)

# இராணுவம் முன்னேறுதவாறு போராளிகள் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், சனி

வடமராட்சிப் பகுதியில் குறிப்பிடப்பட்ட பகுதிகளிலிருந்து இராணுவம் முன்னேறுதவாறு போராளிகள் பலத்த கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை சில பகுதிகளில் இராணுவ நடமாட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், பெருந்தொகையான இராணுவத்தினர் வடமராட்சி முகாம்களில் ஹெலி மூலம் இறக்கிவிடப்பட்டதாகவும் அங்கிருந்துகிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ)

## வவனியாவில் கற்பகம்

[கொழும்புத்துறை]

வவனியா மாவட்டத்தில் பொதுமக்கள் பனம் பொருள்களை இலகுவாக வாங்குவதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் வசதி செய்து கொடுக்கும் முகமாக வவனியா பஜாரில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் பனை அபிவிருத்திச் சபையின் கற்பனை விற்பனை நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

## தற்போதைய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் இத்தாக்குதல்களினால் பலியாகியுள்ளனர் என்றசெய்திகளை அறியும்போது யாழ்ப்பாணத்திலுள்ள நிலைமை ஒரு யுத்தகால நிலைமையாகவே உள்ளதெனத் தோற்றுகின்றது. இதனால் உங்கள் கோரிக்கையை ஆராய்ந்து இது தொடர்பாக இறுதி முடிவெடுப்பதற்காக எமது திட்டக்குழுவிடம் சமர்ப்பிக்க தயக்கம் காட்ட வேண்டியுள்ளது' எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஊ)

## இந்திய விமானம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் போட்ட செயலுக்கு கண்டனம் தெரிவிக்கும் பிரேரணையைக் கொண்டு வந்தனர்.

இப்பிரேரணையை இலங்கை தவிர எல்லா நாடுகளும் எதிர்த்து வாக்களித்தன. சிங்கப்பூர் நடுநிலைமை வகித்தது

இந்திய விமானம் உணவுப் பொருள் போட்டது மனிதாபிமான முறையிலான உதவி எனக்கூறி பாகிஸ்தான் உட்பட சகல நாடுகளும் இப்பிரேரணையை எதிர்த்து வாக்களித்தன. [மா]

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நவீனவசதிகள்கொண்ட இந்த விமானம் தற்போது இலங்கை விமானப்படையினர் உபயோகிக்கும் சியா மார் செட்டியைவிட சக்திவாய்ந்தவையாகும் இவை கரையிலுள்ள இலக்குகளைத் தாக்கவும், விமான ஓட்டிகளை பயிற்றுவிக்கும் நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படலாம் 'ருசானோ' விமானங்கள் பிரிட்டிஷ் விமானப் படையினராலும் உபயோகப் படுத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போதுள்ள சீனத்தயாரிப்பான 'வை—12' ரக போக்குவரத்து விமானங்களுடன் மேலும் பலவற்றையும் விமானப்படை கொள்வனவு செய்யவுள்ளது. ஆயினும் எத்தகைய விமானங்கள் வாங்கப்படவுள்ளன என்பதனை இவ்வட்டாரங்கள் தெரிவிக்க மறுத்து விட்டன. (ஊ)

# "எவ்வளவு கஷ்டமிருந்தாலும் அரசியல் தீர்வை காணவேண்டும்''

— அமைச்சர் லலித்

[கொழும்பு]

தீவிரவாதிகளின் நடமாட்டத்தை முற்றுகச் சட்டுப்படுத்தமுடியாது. பஞ்சாப்பில் நடப்பதனைப் பருங்கள். இலங்கையைவிட மும்மடங்கு அதிகமான இராணுவத்தினர் பஞ்சாப்பில் கடமைபுரிகிறுர்கள் ஆனல் ஒரே நாளில் 3 பஸ்களில் 72 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பாராளுமன்றில் பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிக நிதியை ஒதுக்கும் குறைநிரப்பு பிரேரணைமீது இருநாட்களாக நடந்த விவாதத்திற்கு பதிலளித்துப்பேசிய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

பேச்சுவார்த்தைக்கான கதவினை நாம் மூடிவிடமுடியாது. எமக்குள் எவ்வளவு கஷ்டமிருந்தாலும் நாம் அரசியல் தீர்வினையே காணவேண்டும் புலிகள் ஒருபோதும் பேச்சுவார்த்தைக்கு வராது எனவே தான் எமது பலத்தை புலிகள் மீது காட்டவேண்டும்.

வடமராட்சியில் இராணுவ நிலைமை திருப்தியாகவுள்ளது நெல்லியடியில் இராணுவ முகாம்தாக்கப்பட்டதுபோன்ற சம்பவங்களும் இடம்பெறலாம் நெல்லியடிபாடசாலைக்கு முன்னுலுள்ள கட்டிடங்களை நாசமாககிவிட ஆயுதப்படையினர் விரும்பவில்லை. அதற்குக் கிடைத்த பரிசே இது. அரசியல்வாதிகள் இக்கட்டடங்களை நிர்மூலமாக்கவேண்டாம் என்று கேட்கவில்லை. மக்களின் மனதை வென்றெடுக்கவே இராணுவத்தினர் அந்த வீடுகளை நாசப்படுத்தவில்லை. அந்த வீடுகளுக்குள்ளேயிருந்து தாக்குதலை நடத்தினுர்கள்.

## கைதிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

றும் மர்ம உறுப்புக்களை ஒரு மேசைலாச்சியில் வைத்துமூடி நசுக்கித் துன்புறுத்திகிறர்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதுபற்றி விசாரித்து தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றம் மனுதார் தாம் மனிதாபிமான மற்றமுறையில் நடத்தப்பட்டதாகத்தெரிவித்திருந்த முறைப்பாடு உண்மை என்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் கைது செய்யப்படுகிறவர்கள் சில பொலிசாரினல் மூன்றும்தர முறைகளுக்குள்ளாக்கப் படுகிறுர்கள் என்பது புலனுகியுள்ளதென்றும் தெரிவித்திருந்தது.

உயர்நீதிமன்ற தீர்ப்பையடுத்து பாணந்துறைப் பொலிசைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் செசில் கொடித்துவக்கு, சப் இன்ஸ்பெக்டர்கள், முனசிங்க, சந்திரபால, கான்ஸ்டபிள் காமினி ஆகிய நால்வரும் விசாரணைகளுக்கு குந்தகம் விளையாமலிருக்கும் பொருட்டு கழுத்துறை மாவட்டத்திலிருந்து வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

## பீரங்கித் தாக்குதல்

பலாலி, வெள்ளி

குசுமன் கடலிலிருந்து நள்ளிரவு நேரங்களில் மக்கள் வாழும் பகுதியை நோக்கிக் கடற்படையினரால் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட வண்ணமுள்ளன

கடந்த வியாழனன்று மேற்கொள்ளப்பட்ட தொடர் பீரங்கித் தாக்குதலை அடுத்து அச்சம் காரணமாக, சேந்தான்குளம், வாழ்அகம், குசுமன் துறைப் பகுதி மக்கள் இரவோடு இரவாகப் பாதுகாப்பான இடங்களை நாடிச்சென்றனர்.

## சுதந்திர சமாதான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து இடம பெற்றுவரும் இராணுவத்தாக்குதல்களினுல் தாம்படும் துன்பங்களை கதறி அழுதபடி கூறினுர்கள்.

விமானக்குண்டு வீச்சுக்கு இலக்கான யாழ் வீரமாகாளி அம்மன் கோவில் கட்டிட சேதங்களையும் ஹெலி சூட்டின் போது சேதமடைந்த நல்லைஆதீனத்தையும் பார்வையிட்டதுடன் ஆதீன முதல்வரையும் சந்தித்துரையாடிய திரு. பூரி நல்லூர் கந்தசாமி கோவில் பூஜைவழிபாடுகளிலும் கலந்து கொண்டார்.

## கடும்மோதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது படையினர் தரப்பில் ஐந்திற்கும் மேற்பட்டோர் பலியானதுடன் பலர் காயமடைந்தனர்''.

இவ்வாறு விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கடுமையான நேரடிமோதலின் போது தமது தரப்பில் கிருபா (வேந்தன் என்பவர் வீரமரணமடைந்ததாகவும் அவருக்கு வீரவணக்கத்தை செலுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### அடுத்த மாதம் 23-ந் திகதி———

## யாழ். நகரில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை!

யாழ்ப்பாணம், சனி

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை அடுத்த மாதம் 23ம் திகதி யாழ் நகரில் நடைபெறவுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர் சங்கத்தினால் இப் பரீட்சை அடுத்த மாதம் இலங்கையின் சகல மாவட்டங்களிலும் மேற்படி திகதியில் நடைபெறவுள்ளது. கடந்த இரு வருடங்களாக இப் பரீட்சை வட மாகாணத்தில் நடாத்தப்படாமல் இருந்து வந்தது இம் முறையாவது இப் பரீட்சையை யாழ் மாவட்டத்தில் நடாத்தும்படி யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர் சங்கம் பல தடவை இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர் ''மூன்றும்'' தரப் பரீட்சையை மட்டுமே இம்முறை நடாத்துமெனவும், இப் பரீட்சையில் தோற்றவிருக்கும் வடமாகாண பரீட்சார்த்திகள் அனைவரும் இம்முறை யாழ் நகரிலேயே இப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். என இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்காரணமாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு வவனியா ஆகிய இடங்களிலுள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தத்தர் சங்க அங்கத்தவர்கள் இப் பரீட்சையில் தோற்றுவிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர் சங்கத்துடன் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட திரு. ஏ. எஸ். குணரட்ணமும் இணைந்து செயல்பட்டு வருகின்றார்.

[வி]

## நலன்புரிச் சங்கம் பாராட்டு

பண்டத்தரிப்பு, வெள்ளி

''யாழ். மாவட்ட சுகாதார வைத்திய துறைகளை முன்னேற்றவேண்டும் என்பதில் அதிக ஆர்வம் கொண்டு செயல்பட்ட நிர்வாக உத்தியோகத்தர் திரு. இராசேந்திரத்தின் சேவைகள் எமது சிந்தையில் என்றும் நிலைத்து நிற்கும். அவரின் சிறந்தகுணாதிசயங்கள் ஏனையோரும் பின்பற்றக்கூடிய முன்மாதிரியானவையாகும்.''

இவ்வாறு கடந்த ஏழு வருடங்களாக யாழ். சுகாதார திணைக்கள நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள திரு. பொ. இராசேந்திரத்திற்கு யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக நலன் புரிச் சங்கத்தினால் அளிக்கப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். சுகாதார திணைக்கள பிரதம கணக்காளர் திரு. எஸ். எக்ஸ். ஞானசேகரம் குறிப்பிட்டார்.

உதவி பிரதேச சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் சி விஜயராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு வை. செந்தில்நாதன், திரு. க பரமானந்தம், திரு. எஸ் மகேந்திரசா ஆகியோர் உட்பட மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

திரு. ஆ. சிறிகரன் நன்றி கூறினார்.

## ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதில்லை

உடுவில், வெள்ளி

நீண்டகால அனுபவம் உடைய ஆசிரியர்கள் பல துறைகளில் பயிற்சியும் அனுபவமும் உடையவராக திகழுவர் உண்மையில் வயது முதிர்ந்தவர்களிடம் தான் கல்வி கற்பித்தலில் திறமையும் பயிற்சியும் ஆற்றலும் இருக்கும் ஆசிரியர்கள் தம்தொழிலில் இருந்து என்றுமே ஓய்வடைவதில்லை.

இவ்வாறு 18 ஆண்டுகால ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள நவாலி மகாவித்தியாலய உபஅதிபர் திரு. பி. ரி. சம்பந்தபிள்ளைக்கு ஆசிரியர் மாணவர்கள் அளித்த பிரிவுபசார வைபவத்தில் பேசிய அதிபர் செ. கதிர்காமதம்பி கூறினார்.

பாடசாலை அதிபர் செ. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் இராசையா, முன்னாள் ஆசிரியர் எஸ். செல்லத்துரை, ஆசிரியர் மாணிக்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் சார்பாக பாராட்டுப் பத்திரம் செல்வி இ. சஜீவியால் வழங்கப்பட்டது

ஆசிரிய நலன்புரிச் சங்கச் செயலாளர் திருமதி யோசேவ் நன்றிகூறினார்.

## கூட்டு பிரார்த்தனை

(அராலி நிருபர்)

அராலி வடக்கு பாரதி சன சமூக நிலைய நிர்வாகத்தினர் வெள்ளிக்கிழமை தோறும் சன சமூக நிலைய மண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தி வருகிறார்கள்.

இக் கூட்டுப் பிரார்த்தனையின் போது சைவச் சிறுவர்களும் ஒழுங்காகத் திருமுறை ஓதுதல், நற்சிந்தனை வழங்குதல், தேவாரப் பண்ணிசைப் போட்டிகள் போன்றவற்றையும் நடாத்தி வருகிறார்கள்.

## நிவாரணப் பொருள் சங்கானையில் விநியோகம்

[பண்டத்தரிப்பு நிருபர்]

சங்கானை நிற்சாமம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகள் குடும்பங்களுக்கு நேற்று புதன்கிழமையன்று இந்திய அரசின் நிவாரணப் பொருள்கள் இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியினால் வழங்கப்பட்டன.

அரிசி, மா, பாம் ஓயில். சீனி, பருப்பு, தீப்பெட்டி, பால்மா, மண்ணெண்ணை ஆகிய பொருள்கள் அகதிகளுக்கு வழங்கப்பட்டன.

## சத்துணவுத்திட்டம் அறிமுகம்

(மண்டைதீவு நிருபர்)

யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டு பாரதி மன்றச் சனசமூக நிலையத்தின் ஆதரவில் இப் பகுதி மக்களுக்கு சத்துணவுத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

குழந்தைகள் சத்துணவின்றி நோய்களுக்குள்ளாவதைத் தடுக்கும் வகையில் நடைபெற்ற இந்தச்சத்துணவு அறிமுக வைபவத்தில் நூற்றுக்கணக்கான தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

யாழ். மாநகரசுகாதாரப் பகுதித்தொண்டர்கள் ஆலோசகர்கள் கலந்து கொண்டு இலைக்கஞ்சி தயாரிக்கும் முறைகள் பற்றி விரிவுரையும் செய்முறைப்பயிற்சியும் கொடுத்தனர்

முட்டை, பப்பாசிப்பழம். எலுமிச்சம்பழம் போன்றவற்றை சத்துணவுக்குப் பயன்படுத்தும் முறைகளும் காண்பிக்கப்பட்டன.

## ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு இந்திய உணவுப்பொருள்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இந்தியா அன்பளிப்பு செய்துள்ள நிவாரண - உணவுப் பொருள்கள் பண்டத்தரிப்பு பகுதியில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளுக்கு சென்ற புதன்கிழமை இந்திய செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளினால் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

பண்டத்தரிப்பு பத்திமா மாதா ஆலயம், செபமாலை மாதா ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், ஜசிந்தா றோ. க. வித்தியாலயம் ஆகிய இடங்களில் தஞ்சமடைந்துள்ள வலி வடக்கைச்சேர்ந்தவர்களான 160குடும்பங்களுக்கு இந்த உணவப் பொருள்கள் வழங்கப்பட்டன.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த உணவுப் பொருள் விநியோகத்தில் பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் திரு. பி. கபிரியேல்பிள்ளையும் ஏனைய உத்தியோகத்தர்களும் மற்றும் பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ஏ. வி. துரையப்பா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்திய செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி அகதிகளுக்கு உணவுப் பொருள்களை வழங்கி விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

உணவுப் பொருள்களை பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம் பொறுப்பேற்று விநியோகம் செய்தது. பண்டத்தரிப்பு பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ஏ. வி துரையப்பா நிவாரணப் பொருள்கள் வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கும் கடிதம் ஒன்றையும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதி நிதியிடம் கையளித்தார்.

இறுதியில் பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலைய தலைவி அன்னை யூலாலி நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் அகதிகள் அனுபவித்துவரும் கஷ்டங்கள் பற்றியும், மேலும் அவர்களுக்கு செய்ய வேண்டிய வசதிகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

## சமூகசேவை உத்தியோகத்தர் நியமனம்

[கொழும்புத்துறை நிருபர்]

சமூகசேவை இலாகாக்கள் யாழ் மாவட்டத்திற்கு மூன்று புதிய சமூகசேவைகள் உத்தியோகத்தர்களை நியமனம் செய்துள்ளது.

கே. தர்மலிங்கம், எஸ். யோகேந்திரராசா, எஸ். சிவஞானசுந்தரம் ஆகிய மூவருமே புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள சமூகசேவை உத்தியோகத்தர்களாவர்.

இம்மூவரும் முன்னர் பிற மாவட்டங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றியுள்ளனர். குறுகியகாலப்பயிற்சியின் பின்பு இம்மூன்று உத்தியோகத்தர்ளும் உதவி அரசஅதிபர்பிரிவுகளுக்குக் கடமைக்காக அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று யாழ் மாவட்ட சமூகசேவை அத்தியட்சகர் திருமதி க. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

## இந்திய நிவாரணப் பொருள்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இந்திய நிவாரணப் பொருள்கள் கடந்த சில நாட்களாக யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண-இந்திய செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்களின் மேற்பார்வையில் இவ் உணவுப் பொருள்கள் விநியோகம் நடைபெற்று வருகின்றது

இதுவரை இந்த உணவுப் பொருள்கள் புங்கங்குளம் பகுதியில் 27 குடும்பங்களுக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரியில் வைத்து 188 குடும்பங்களுக்கும், யாழ்ப்பாணம் ஸ்ரேசன் பகுதியில் 51 குடும்பங்களுக்கும், மேலும் பண்டியந்தாழ்வு, நாவந்துறைப் பகுதிகளிலுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன.

இதேவேளை நேற்று, யாழ். உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் யாழ். - இந்திய செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்களடங்கிய கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், உணவுப் பொருள்களை, உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைப்பதற்கு எவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என ஆலோசிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

[வி]

## இரு மாணவர்களுக்கு வை.எம்.சி.ஏ.புலமைப்பரிசில்

[பண்டத்தரிப்பு நிருபர்]

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப்பெற்ற இரு மாணவர்களுக்கு பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது. காரைநகர் இந்துக் கல்லூரியைச் சேர்ந்தசெல்வன் கே. கிருஷ்ணகுமார், காரைநகர் யாழ்ரன் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் வி. தயாபரன் ஆகிய மேற்படி மாணவர்கள் இருவருக்கும் அரசாங்கம் வழங்கும் புலமைப் பரிசில்களைப்போல ஏழு வருடகாலத்திற்கு இந்த புலமைப் பரிசில்களை வை. எம். சி. ஏ. வழங்கி வரும் என்று இதுபற்றி தகவல் தருகையில் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ தலைவர் ஆசிரியர் எஸ். இரத்தினவேல் தெரிவித்தார்.

## இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 27 (11-7-1987)
கிழமை: சனி
திதி: பூரணை மேல் பிரதமை
நட்சத்திரம்: பூராடம்.

மேடம்: உள்ளத்தில் உவகைக் கூத்து மனதிலும் புதிய எண்ணங்கள் உருவாகும். நீண்டநாள் பிணியும் இன்று தீரும்.

இடபம்: கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிறுவருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கவும். உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும்.

மிதுனம்: பொன்னுன வாழ்வும் பெண்ணாலே கிட்டும். கண்ணியம் கடைவிரிக்கும். கடமையிலும் புதிய சூழ்நிலை உருவாகும்.

கடகம்: ஆசைஅலைகளால் அவப்பெயருக்கிடமுண்டு புதிய முதயீட்டைத் தவிர்க்கவும் போட்டி மனப்பான்மையைத் தவிக்கவும்.

சிங்கம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். இனபந்துக்கள் ஆதரவும் பெருகும் பொருள் சேர்க்கையுமுண்டாம்.

கன்னி: எதிர்காலம் பிரகாசமடையும் நீண்டபயணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

கடமையும் சிறக்கும்.

துலாம்: புகழின் உச்சத்திற்கு இன்று அழைத்துச்செல்லப்படுவீர்கள். அரசியளாலர்கள் உயர்வடைவர். வாழ்விலும் வசந்தம் நிலவும்.

விருச்சிகம்: உள்ளத்தின் அடித்தளத்தில் ஊமைக்கண்ணீர்வடிக்கும். கடமையிலும் தொல்லைகள் உருவாகும். பின்னணியில் பிளவுக்கிடமுண்டு.

தனுசு: தூக்கம் விழிகளைத் தழுவமறுக்கும். கடமையிலும் நிதானம் செலுத்தவும் பிரயாணத்தைப பின்போடவும்:

மகரம்; குடும்பவழி முன்னேற்றமடையும். ஆராய்ச்சியாளர்களுக்கு உவப்பான தினம். தொழிலிலும் மகிழ்ச்சி வேண்டும்.

கும்பம்: இனிக்கப் பேசுவோர் விடயத்தில் அவதானம் வேண்டும். தொழிலிலும் சோர்வு தென்படும். எதையும் முன் எச்சரிக்கையுடன் வழி நடக்தவும்.

மீனம்: பரோபகச் சிந்தை மேலிடும். சிலருக்கு உயர் கல்வி நாட்டமுண்டு. பெரியோர் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்

திருமலை
வே. ரவீந்திரன்

## தலைமைத்துவ பயிற்சிகருத்தரங்கு

[கொழும்புத்துறை நிருபர்]

''எதிர்காலத்தில் நல்ல தலைமைத்துவத்தை உருவாக்கக்கூடிய ஆற்றல் இளைஞர்களிடமே தங்கியுள்ளது. எனவே இளைஞர்களுக்கு நிர்வாகத் திறமை இன்றியமையாதது.

இவ்வாறு யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

இக்கருத்தரங்கு யாழ். மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் திரு. கே. எஸ். கார்த்தி தலைமையில் நடைபெற்றது. மூன்று நாட்கள் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் இளைஞர் கழகங்களைச் சேர்ந்த சுமார் ஐம்பது இளைஞர் யுவதிகள் பங்கு பற்றினர்.

## வெளியீட்டு விழா

கொழும்புத்துறை, வெள்ளி

கவிஞர் தேவதாசனினால் பாடப்பட்ட 'காத்தவன் காவியம்' வெளியீட்டு விழா இம் மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தொடர்பகத்தில் யாழ் மறை வட்டக்குழுத் தலைவர் வண. பிதா செ. ஸ்ரீல்லறி ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் ஆயர் அதிவண. பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை பிரதம விருந்தினராகவும், யாழ் செயலக உதவியரச அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, திரு. வெ. சுப்பிரமணியம், கலாநிதி அ. சண்முகதாஸ், கலாநிதி சி. மௌனகுரு ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

ஈழத்தின் இறை இயேசு மறைக் கருத்தை மங்காமல் காத்த மாமுனி யோசேவ் வாஸ் அடிகளாரைக் காவிய நாயகனாகக் கொண்டு இக் காவியம் பாடப்பட்டுள்ளது.

# "நெல்லியடியில் சகல மக்களும் வீடுகளிலிருந்துவெளியேறிவிட்டனர்"

## தப்பிவந்த அகதிகள் தகவல்

[மாவிட்டபுரம் நிருபர்]

"வடமராட்சிப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள 10 இராணுவ முகாம்களிலிருந்தும் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் இடம்பெறுவதுடன் ஹெலிகொப்டர்களும் வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு வருகின்றன. அங்கு வசித்த மக்கள் அனைவரும் அல்லோல கல்லோலப்பட்டு வீடுகளை விட்டு வெளியேறுகின்றனர்.

வடமராட்சியிலிருந்து உடுத்த உடையுடன் புறப்பட்டு கால்நடையாக வந்து சேர்ந்துள்ள அகதிகள் இவ்வாறு தெரிவித்தனர்"

வடமராட்சியிலிருந்து வந்துள்ள அகதிகள் பலர் இணுவில் பகுதியில் தங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் வல்வெட்டியிலிருந்து வந்த என். சுந்தரலிங்கம், எஸ். கணேசமூர்த்தி ஆகியோரிடம் வடமராட்சி நிலைமை பற்றிக் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:- வடமராட்சியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதிலிருந்து அங்கு பீதியுடனேயே வசித்து வந்தோம் அப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் தேடுதல் என்ற பெயரில் இராணுவத்தினர் பொதுமக்களுக்கு பல்வேறு கஷ்டங்களை ஏற்படுத்தி வந்தனர். நடுச்சாமங்களிலும் சுற்றிவளைத்து தேடுதல் நடத்துவார்கள். சீவல் தொழிலாளர் உள்ளனரா? கொட்டியாக்கள் உள்ளனரா? என்றெல்லாம் கேட்பார்கள்.

### படையினரின் தொல்லைகள்

பூஸா சென்று வந்த இளைஞர்களை விசாரணை செய்து விட்டுவிடுவார்கள். ஏனையோர் நிலை மோசமாகியது. அவர்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்டு தொந்தரவு செய்வார்கள். வேலிகளைத் தீயிட்டுக் கொழுத்துவார்கள். வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம் செய்வார்கள். நாம் விவசாயம் செய்துவந்ததால் விவசாயிகள் என்று கூறித் தப்பிவந்தோம்.

### நிலைமை மோசமானது.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

5ம் திகதி நெல்லியடி முகாம் தாக்கப்பட்டதையடுத்து அங்கு நிலைமை மோசமானது. எமது வீட்டிலிருந்து 2மைல் தூரத்தில் நெல்லியடி உள்ளது. இரவிரவாக பயங்கர சத்தங்கள் கேட்டபடி இருந்தன. ஹெலிகொப்டர்களும் வடமராட்சிப் பகுதி முழுவதையும் சுற்றி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவண்ணமிருந்தன.

மக்கள் அன்றைய தினமே பெருமளவில் வெளியேறினார்கள். நாம் பார்த்துப்போவோமென்று இருந்தோம் கடந்த 3 தினங்களாக அங்குள்ள 10 முகாம்களிலிருந்தும் ஷெல் தாக்குதல் தொடர்ச்சியாக இடம்பெற்றதுடன் ஹெலியும் சுட்டபடியிருந்தது. முகாம்கள் சுற்றிவர இருந்த. மக்கள் வெளியேற முடியாது உள்ளே அகப்பட்டுக் கொண்டனர். இதனால் மறைந்து மறைந்து குறுக்குப்பாதைகளால் வல்லை வெளியைக் கடந்து மக்கள் வெளியேறினார்கள்.

நாம் அங்கிருந்து ஒருவாறு வல்லை வெளியை அடைந்தபோது ஹெலி ஒன்று வந்து சுட்டது. பதுங்கியிருந்துவிட்டு திரும்பவும் வந்துசேர்ந்தோம். 40 பேர் ஒன்றாக வந்தோம். வெள்ளைக்கொடிகளைப் பிடித்தபடி வந்தோம்.

அச்சுவேலிப்பகுதிக்கு வந்தபோது அங்கு பெரும் கூட்டமே காணப்பட்டது அவர்கள் வடமராட்சியிலிருந்து வந்த மக்கள் எனத் தெரிய வந்தது. ஆவரங்கால் சிவன் கோயிலில் பெரும் தொகையான மக்கள் தங்கியுள்ளனர்.

இன்னும் தென்மராட்சிப் பகுதிக்கும் பலர் சென்று கொண்டிருந்தனர். முள்ளி முகாமில் இராணுவம் அவர்களைத் தடுத்தது அவர்கள் பின்னர் குறுக்குப் பாதைகளால் சென்றனர். பெரும்பாலான மக்கள் வடமராட்சியிலிருந்து வெளியேறி விட்டனர்.

இந்திய நிவாரணப் பொருள்கள்கூட நாம் இன்னமும் பெறவில்லை. எமக்கு அப்பொருட்களை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோது மேற்படி சம்பவம் நடநததால் அது வழங்கப்படவில்லை. அங்கு கூட்டுறவுச் சங்கங்களில் இந்தப் பொருள்கள் தேங்கிக் கிடக்கின்றன.

அப்பகுதியெங்கும் போராளிகள் நடமாடி வருகிறார்கள். அவதிப்படும் மக்களுக்கு அவர்கள் உதவி வருகிறார்கள். மிகுந்த இக்கட்டான நிலையில் உயிரையும் மதியாது அவர்கள் போராடுகிறார்கள். முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளைவிட ஏனைய பகுதிகளில் தமது நிலையை அவர்கள் வலுப்படுத்தி வருகிறார்கள்.

நெல்லியடியிலிருந்து 6ம் திகதி கால் நடையா குழந்தைகளுடன் வந்து, சேர்ந்து இணுவிலில் தங்கியுள்ள திருமதி ஜெகசோதி, திருமதி பாலசுப்பிரமணியம், திருமதி ஜெகதீஸ்வரன் ஆகிய 3 குடும்பததனரையும் சந்தித்தேன்.

அவர்கள் கூறியதாவது:-

5ம் திகதி ஞாயிறு இரவு 8-15 மணியளவில் நெல்லியடி முகாம்மீது தக்குதல் ஆரம்பமானதையடுத்து பயங்கர சத்தங்கள் கேட்டன. 8-30 மணியளவில் 2 ஹெலிகள் வந்து தாக்குதல் நடாத்தின. ஷெல் தாக்குதலும் சரமாரியாக இடம்பெற்றது தாக்குதல் நடந்த முகாமிலிருந்து கால் மைல் தொலைவில் நாம் வசித்து வந்தோம். பக்கத்து வீட்டில் ஷெ[illegible]லத்த சேதம் ஏற்பட்டது. அடுத்தடுத்து அங்கு ஷெல்கள் விழுந்தன. சிறு குழந்தைகளுடன் உயிரைக் கையில் பிடித்தபடி விடியும்வரை இருந்தோம். அதிகாலைபோல் உடுத்த உடையுடன் வல்லை வரை தப்பி வந்து அங்கிருந்து இணுவிலுக்கு வந்தோம்.

### ஆயிரக்கணக்கில் அகதிகள்

வரும்போது ஆவரங்கால் சிவன் கோயிலில் பல ஆயிரம் பேர் அகதிகளாக தங்கியிருப்பதைக் கண்டோம்.

எமது வீடுகள், மற்றும் உடைமைகளுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை உடுக்க மாற்று உடுப்புக்கூட இல்லாமல் இருக்கிறோம். நெல்லியடியில் ஒருவட்டிலுமே மக்கள் இல்லாத அளவுக்கு சகல மக்களும் வெளியேறிவிட்டார்கள். அப்பகுதியில் சடலங்கள் பல வீதியில் கிடந்து நாற்றமெடுக்கிறது. எமது உறவினர்கள் நிலை என்ன என்பதும் தெரியவில்லை.

---

# "மலையகத்தின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவேண்டும்"

## -- சபையில் லக்ஷமன்

கொழும்பு, வெள்ளி

'மலையகத்தின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் மலையகத்தில் நடைபெறும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.'

அத்தனகல எம். பி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி கடந்தசெவ்வாயன்று பாராளுமன்றத்தில் பேசுகையில் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: மலையகத்தில் சிங்கள கடைகள் மூடப்படுகின்றன. தமிழ் கடைகள்புதிதுபுதிதாகத்திறக்கப்படுகின்றன. தமிழ் கூட்டுறவு சங்கங்கள் திறக்கப்படுகின்றன இது அரசாங்கத்துக்கு பொருளாதார ரீதியிலான அச்சுறுத்தலாகும்.

இங்கிருக்கும் இந்திய பாஸ்போட் வைத்திருப்பவர்களை, அங்கு அனுப்புவதில் கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால் தோட்டத்துரைமார் இந்தியர்களுக்கு பிரஜா உரிமை வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர். அதுகுறித்து அவர்களுக்கு குடி வரவு, குடியகல்வு திணைக்களத்திலிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பிரஜாஉரிமை வழங்குவதற்கான விபரங்களை திரட்டும்படி தோட்டத்துரைமார்கேட்கப்பட்டுள்ளனர். அது கவனிக்கப்படவேண்டிய விடயம்.

மலையகத்தில் எல்லோருக்கும் பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும் என்பதில் இ. தொ. கா. கூடிய அக்கறை கொண்டுள்ளது. அதற்காக அரசாங்கத்தை இ. தொ. கா. வற்புறுத்தி வருகிறது.

அவர்கள் எல்லோருக்கும் பிரஜா உரிமை வழங்கப்பட்டால் நுவரேலியாவில் மட்டும் ஐந்து லட்சம் பேர் வாக்காளர்களாக பதிவுசெய்யப்படுவார்கள். அப்படி பதிவுசெய்யப்பட்டால் நுவரேலியா முதலாவது எம்.பி., இ. தொ. கா.விலிருந்தும், இரண்டாவது எம்பி சுதந்திரக்கட்சியிலிருந்தும் தெரிவுசெய்யப்படுவர். மூன்றாவது இடமே ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கும்.

சிலவேளை 3 எம். பிக்களும் இ. தொ. காவிலிருந்து தெரிவு செய்யப்பட்டு ஏனையோருக்கு இடம் கிடைக்காதும் போகலாம்.

கூடிய விரைவில் இலங்கையின் பிரஜா உரிமைச் சட்டத்தை மாற்றப்போகிறார்கள். ஒரேயொருவருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்குவதற்காக பிரதான பிரஜா உரிமைச்சட்டம் மாற்றப்படவுள்ளது. அதற்கான சட்டமூலம் வரையப்படுவதாக அறியமுடிகின்றது.

பிரஜா உரிமை வழங்கும்போது இந்தியாவிற்கு செல்லவேண்டியவர்களை அங்கு அனுப்புவதிலும் கவனம் செலுத்த வேண்டும். சிலருக்கு இந்திய தூதரகம் இன்னும் பாஸ் போட்டுக்கள் வழங்கவில்லையாம். அவர்கள் அவற்றை வழங்கப்போவதில்லை.

இந்தியாவிலிருந்து எல்லா இலங்கை அகதிகளும் இங்கு வந்த பின்பே இந்திய பாஸ்போட் பெற்றவர்களை அழைப்பது தொடர்பாக தீர்மானிக்கப்படும் என்று இந்திய தூதுவர் கூறியது எனக்குஞாபகம். எனவே நாம் பிரஜா உரிமை வழங்கும்போது பல விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

---

# "வடபகுதியை விடுவிக்க அரசினால் முடியவில்லை"

## -- சபையில் அனில்

கொழும்பு, வெள்ளி

"யாழ்ப்பாணத்தில் போதிய உணவு கையிருப்பில் இருப்பதாகக் கூறும் நீங்கள் இந்திய உணவு உதவியை ஏன் அனுமதித்தீர்கள்?"

இவ்வாறு மத்துகம எம். பி. திரு அனில்முனசிங்கபாராளுமன்றத்தில் பேசும்போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: பேச்சுவார்த்தைக்கு வர புலிகள் விரும்பவில்லை. அப்படியானால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள். பயங்கரவாதத்தை அடக்கும் போராட்டத்திற்கு நீங்கள் அதிகவிலை கொடுத்துவிட்டீர்கள். நான்கு வருடங்களுக்கு நீங்கள் யுத்தம் நடத்தி கண்ட பலன் என்ன?

1983ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த போராட்டம் பின்னர் படிப்படியாக யாழ் குடாநாடு முழுவதும் பரவியது. கிழக்கிற்கும் பரவியது. நீங்கள் என்னதான் செய்யப் போகிறீர்கள். உங்கள் திட்டம் தான் என்ன?

இந்திய விமானங்கள் வந்தபோது அவற்றை எதிர்க்க எம்மிடம் பலம் இருக்கவில்லை. அப்போது உங்களோடு கூட்டுப் பிரகடனம் ஒன்றை வெளியிட நாம் முன்வந்தோம். ஆனால் நீங்கள் முதலில் இணங்கியபோதும் பின்னர் அதற்கு இடம்தரவில்லை.

வடக்கில் தேர்தலில்போட்டியிட முற்பட்ட திரு. முதியான்சே தென்னக்கோன் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளார். அப்படி நடக்கும் போது இன்று தேர்தல் அவசியம்தானா?

படைகளை எவ்வளவுதான் கட்டி எழுப்பினாலும் வடமாகாணத்தை விடுவிக்க அரசினால் முடியவில்லை. புலிகள் திறமையாகச் செயல்படுகிறார்கள். அவர்கள் தகவல் பரிமாற்றம் திறமையாக உள்ளது. எமது படையினர்களின் நிலை என்ன? அவர்களுக்கு போதியவசதிகள் இல்லை.

---

## பயிற்சி வகுப்பு

[ஒட்டுசுட்டான் நிருபர்]

முல்லைத்தீவுபகுதியில் திட்டமிடல் அமைச்சின் கீழ் விசேட சேவை அலுவலர்கள் கடமையாற்றி பதவிமாற்றம் பெற்று உள்நாட்டு அலுவல் அமைச்சின் கீழ் கிராமசேவை அலுவலர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்றை அரசாங்க அதிபர் திரு. க.பொன்னம்பலம் ஆரம்பித்து வைத்தார்.

---

## இந்திய நிவாரண

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காது. விரைவாக நிவாரணப் பொருள்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் போய்ச்சேரும்.

இந்த பொருள்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவாககிடைக்க வழிசெய்ய வேண்டும். குறிப்பாக கிழக்கிழங்கை மக்கள் கூடுதலாக பாதிப்படைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்கள் விரைவாக போய்சேரநடவடிக்கை எடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும். [ஒ]

---

## இலவச உணவு விநியோகம்

ஊர்காவற்றுறை வெள்ளி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரின் எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளருக்கு ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க மூலம் இலவச உணவு விநியோகம் நடைபெற்று வருகிறது.

---

## தகவல் தாருங்கள்

இன்றைய அசாதாரண நிலைமைகளால் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளமுடியாது துன்பமுறும் பொதுமக்களுக்கென "தகவல் தாருங்கள்" என்ற தலைப்பில் இலவசமாக 'ஈழநாடு' சேவையொன்றை ஆரம்பிக்கின்றது தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள அல்லது அவர் பற்றிய விபரம் அறிய விரும்புகிறவர்கள் அது பற்றி சுருக்கமாக எழுதி முழு முகவரியுடன் 'ஈழநாடு' ஆசிரியருக்கு அனுப்பிவைக்கலாம். நம்பகமானவை மட்டும் பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)

★

அன்பாலயம், கரணவாய் வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த இரத்தினம் என்பவர் கடந்த மே மாதம் 20-ம் திகதி புத்தூர் பகுதிக்குச் சென்று வருவதாகப் போனவர் இதுவரையும் வீடுதிரும்பவில்லை.

இவரைப்பற்றிய தகவல் எதுவும் கிடைத்தால் உடனே தமக்கு அறியத் தருமாறு இவரது மகள் கிருஷ்ணவேணி வேண்டியுள்ளார்.

தகவல் கிடைத்தால் எமக்கு அறியத்தரவும்.

க. ஜீவகதாஸ்,
அறவழிப் போராட்டக் குழு,
சாவகச்சேரி.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 11-7-87

## வை. எம். சி. ஏ. வெள்ளிவிழாவில்
# வெளிநாட்டுபிரதிநிதிகளுக்கு வடக்கு கிழக்குநிலை விளக்கம்

(கொழும்பு)

அகில இலங்கை வை. எம். சி. ஏ. யின் தேசிய சபையின் வெள்ளிவிழா கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றபோது அதில் கலந்து கொள்ள வந்திருந்த வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த வை. எம். சி ஏ இயக்கங்களின் பிரதிநிதிகள் இப்பிராந்தியத்தில் நிகழ்ந்த அரசபடைகளின் அட்டூழியங்களின் உண்மை நிலை பற்றியும் மக்கள் அடைந்துவரும் சொல்லொண்ணா துன்பங்கள் பற்றியும் விளக்கிக் கூறினர்கள்.

இந்த வெள்ளி விழாவில் கலந்து கொண்ட சர்வதேச வை. எம். சி. ஏ இயக்கத்தலைவர் திரு. ஜேம்ஸ் ஆர். வெலாற்றி, ஆசிய பிராந்திய வை. எம். சி. ஏ. இயக்கத்தின் செயலாளர் வண ரன்சி கொங், இந்திய வை எம் சி ஏ யின் தேசிய சபைத்தலைவர் திரு. பி.எஸ். குறியன் அதன் செயலாளர் திரு. டி. எஸ். சின்னத்துரை ஆகிய பிரமுகர்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த வை எம் சி ஏ இயக்கங்களின் பிரதிநிதிகள் இப்பகுதிகளில் நிகழ்ந்த அரசபடைகளின் அட்டூழியங்கள் மக்கள் அனுபவித்துவரும் துயரங்கள், வீடுகள் அழிப்புகள் உயிரிழப்புகள் ஆகியனவற்றின் உண்மை நிலையை விளக்கமாக எடுத்துக் கூறினர்கள்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வெகுஜனத்தொடர்பு சாதனங்களும் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில தினசரிகளும் வெளியிடும் செய்திகள இங்குள்ள உண்மை நிலையை மூடி மறைப்பதாகவும் இங்கு நிகழும் அனர்த்தங்கள் எதுவும் விபரமாக வெளியிடப்படுவதில்லை என்றும் இச்சந்திப்பின்போது இவர்கள் எடுத்து கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

ஈழவர் முன்னணியின் கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் மூன்று மணிக்கு பண்ணுகத்தில் நடைபெறவுள்ளது.

ஈழப்போராட்டத்தில் இன்றைய அரசியல் நிலை, ஈழப்போராட்டத்தில் ஈழவர் பங்களிப்பு, வெகுஜன இயக்கங்களின் செயற்பாடு ஆகிய பல விடயங்கள் பற்றி இதில் கருத்துரைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழ் நாட்டில்
# பயிற்சிபெற்ற புலிகளுடன் ராணுவம் எவ்வாறு மோதும்?
### -ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

"தமிழ்நாட்டில் பயிற்சி பெறும் விடுதலைப் புலிகளுடன் எமது நாட்டில் பயிற்சிபெற்ற இராணுவத்தினர் போராட முடியாமல்தான் பாகிஸ்தானில் அவர்களுக்கு யுத்தப்பயிற்சி அளிக்கப்படுகிறது' என்று கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க பெலியத்தை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

'உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டாமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சொல்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் போட்டியிடக்கூடாது, அதைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது, என்று கூறிய அவர் இதுவிஷயத்தில் இருபகுதியினருக்கும் ஏதும் தொடர்பிருக்கிறதா என்ற சந்தேகம் தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (மா)

## முகாம்களைத்தாக்க சென்னையிலிருந்து
# விசேஷ குண்டு தயாரிப்பு நிபுணர்கள் வந்துள்ளனராம்

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள பாதுகாப்புபடையினரின் முகாம்களைத் தாக்கவென விடுதலை புலிகள், ஈரோஸ் இயக்கங்களின் விஷேட வெடி குண்டு தயாரிக்கும் நிபுணர்கள் சென்னையிலிருந்து யாழ். வந்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்விரு இயக்கங்களும் ஒன்றிணைந்து கோட்டை, பருத்தித்துறை, வல்வை ராணுவ முகாம்களைத் தாக்கவுள்ளதாகவும் அண்மையில் இடம்பெற்ற நெல்லியடித்தாக்குதல் போன்று இவை மிகக் கடுமையானதாகவிருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஊ)

# இன்று புனித ஆசிர்வாதப்பர் திருநாள்

யாழ்ப்பாணம், சனி

கச்சேரி-நல்லூர் வீதியிலுள்ள புனித ஆசீர்வாதப்பர் தேவாலய வருடாந்த திருநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

பங்குத்தந்தை வண.ஜோசப் தலைமையில் இன்று காலை பாடற்பூசை நடைபெறும் சுமார் ஆறுலட்சம் ரூபா செலவில் மேற்படி தேவாலயம் புனரமைப்புச் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி)

# இந்திய ஜனாதிபதித் தேர்தல் திங்கள் நடைபெறும்

(புதுடில்லி)

இந்திய ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் திங்களன்று காலை புதுடில்லி பாராளுமன்ற இல்லத்திலும், மாநில தலைநகரங்களின் சட்டப்பேரவைகளிலும் நடைபெறும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையில் நடைபெற்றவுள்ள இந்த வாக்கெடுப்பில் ஒற்றைமாற்றுவாக்கு அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் மூன்று தெரிவுகள் செய்யும் வாய்ப்பு இருக்கும்.

காங்கிரஸ் [இ) கட்சிவேட்பாளராக திரு. ஆர் வெங்கட்ராமனும், எதிர்க்கட்சி வேட்பாளராக நீதிபதி திரு வீ. ஆர். கிருஷ்ணஐயரும் சுயேச்சைவேட்பாளராகமித்திலேஸ் குமாரும் இந்திய ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வரும் வியாழன்று மாலை அறிவிக்கப்படும். (எ)

## தற்கொலை

யாழ்ப்பாணம், சனி.

வட்டுக்கோட்டையில் குடும்பமொன்றில் மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவர் நேற்றுத் தனக்குத்தானே மண்ணெண்ணையை ஊற்றித் தீமூட்டித் தற்கொலை செய்துகொண்டார்,

வி. வேலுப்பிள்ளை (வயது 48) என்பவரே இவ்வாறு தீமூட்டி எரிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மரணமானவராவார்.

இதற்கான மரணவிசாரணையை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி கே. கேசவன் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினர். (கு)

## இவர்களுக்கு
# அனுராதபுரம் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு நிருபர்)

யாழ். பிரதேச மலேரியா தடுப்பு இயக்க அலுவலகத்தில் கடமையாற்றும் பத்து நுண்ணுய்வாளர்கள் அனுராதபுரத்திற்கு இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்கள் இடமாற்றத்தை ரத்துசெய்து தருமாறு கொழும்பிலுள்ள தலைமைப் பீடத்திடம் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மரண அறிவித்தல்

### திருமதி குட்டிப்பிள்ளை தம்பிராசா

19. இராசாவின் தோட்டம் வீதியைச் சேர்ந்த குட்டிப்பிள்ளை தம்பிராசா நேற்று 10-07-87-ல் காலமானர். இவர் காலஞ்சென்ற தம்பிராசாவின் [வாட்டர்] அன்பு மனைவியும், திரு நடராசா [வாணம்] திரு. நாகராசா (ரைவர்) திருமதி வேலுப்பிள்ளை நல்லம்மா, திருமதி நாகலிங்கம் செல்லம்மா ஆகியோரின் அன்புத்தாயாருமாவார். அன்னரது இறுதிக் கிரியைகள் இன்று (11-7-87) காலை 10 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் தருபவர்: த.நடராசா, த நாகராச சி-9785

### சிங்கராயர் கிறிசோஸ்தோம்

சிங்கராயர் கிறிசோஸ்தோம் காலமானர். இவர் றீற்ரு ஞானஅலங்காரத்தின் அன்புக்கணவரும், மேரி பிருன்சிஸ்கா, மேரி கொன்சேகா, அன்ரனிருஜன், அன்ரனி ஜோர்ஜ்ருஜன் ஆகியோரின் அன்புத்தந்தையும், அல்பிறெட் மரியராசா, சேவியர் மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனரும், காலஞ்சென்ற குணதாசன், வரப்பிரகாசம், நட்சேத்திரம், மேரிகிறிஸ்தீன. அலோசியஸ் தர்மராசா, மேரியஞ்சலின, மாசறிப்போல் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கெலெனடலர், கறோலினமலர், மேரிடறின ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னரின் நல்லடக்கம் 11-7-87 (இன்று) சனிக்கிழமை காலை எட்டு மணிக்கு சுன்னகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நடைபெறும். உறவினரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். (சி-9798)

### இராயப்பு இராசரெட்ணம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய இராயப்பு இராசரெட்ணம் 10-07-87ல் இறைவனடி சேர்ந்தார். இவர் செபபாக்கியத்தின் அன்புக்கணவரும், கியேஸ், ஜோய்ஸ், ஸ்ரெலா (ஜேர்மனி), ஜெயரெட்ணம், லூசியா, பெலிசியா, ஜீவரெட்ணம் (ஜெபம் - ஜேர்மனி), ஆகியோரின் அருமைத்தந்தையும் திரு. ஏகாபரம் ஜேர்மனி), ஜெயராஜா (றேடியோ சேர்விஸ்). மகேந்திரன் (ஜேர்மனி), மங்களகௌரி ஆகியோரின் அன்பு மாமனரும், பிறிபா, பீமஸ், சுரேன் (ஜேர்மனி), ஜென்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். பூதவுடல் 11-07-87 பி. ப. 4-00 மணிக்கு அன்னரின் இல்லத்திலிருந்து ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி தேவாலயத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு பின் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும். (சி -9786)

# "ஷெல்" தாக்கி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், சனி.

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நகர்ப்புறத்தை நோக்கி நேற்றுக்காலை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினல் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் யாழ் போதன வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில் முனீஸ்வரன் வீதியில் இச்ஷெல்களில் ஒன்று வீழ்ந்து வெடித்ததினல் ஆஸ்பத்திரி ஊழியர்கள், நோயாளர்கள் மத்தியில் பதற்றம் நிலவியது

கொட்டடிப் பகுதியை நோக்கியே பெரும்பாலான ஷெல்கள் ஏவப்பட்டன.

இதேவேளை நாவற்குழி இராணுவ முகாமிலிருந்தும் நேற்றுமுன்தினமிரவு பலத்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ)

# காரைநகரில் மோதலையடுத்து முகாம் திரும்பினர்

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் கடற்படைமுகாமிலிருந்து வெளியேறிய கடற்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலையடுத்து படையினர் தமது முயற்சியைக் கைவிட்டு முகாம் திரும்பினர்.

இவ்வாறு புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சிக்கும்
# இந்தியமருந்துகள்

(பண்டத்தரிப்பு)

இந்தியா கப்பல்மூலம் அனுப்பி வைத்துள்ள மருந்துவகைகளில் ஒருபகுதி கிளிநொச்சி. அரசினர் வைத்தியசாலைக்கும் கடந்தவாரம் வழங்கப்பட்டுள்ளது. (மா)

## ஜி. சி. ஈ. (உயர்தரம்)
# இரு தடவை தோற்றலாம்

கொழும்பு, சனி

இம்முறை க. பொ. த [உயர்தர] பரீட்சைக்குத் தோற்றமுடியாத வடமராட்சி மாணவர்களுக்கு மேலும் இரு தடவை மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படுமென்று பரீட்சை ஆணையாளர் திரு ஸ்டன்லின் பெரேரா தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றத் தவறும் ஏனைய பகுதி மாணவர்களுக்கு இச்சலுகை அளிக்கப்படமாட்டாது எனவும் அவர் கூறினர்.

# இப்படியும் நடந்தது

யாழ்ப்பாணம், வெள்

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கொழும்புப்பிரதிநிதி திரு கிறிஸ்ரி பெர்னண்டோ மாவிட்டபுரம் இராணுவ சென்றியில் தமது இரண்டு கைகளையும் உயர்த்தியபடி இராணுவத்தினரின் அனுமதிக்காக சுமார் அரைமணித்தியாலம் வரை நேற்று காத்திருந்தார்.

திரு. கிறிஸ்ரி பெர்னண்டோ கொழும்பு செல்வதற்காக காங்கேசன்துறை செல்லவிருந்தார்.

அவருடன் சென்றிருந்த இந்திய செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதி திரு. சௌத்திரி மற்றும் யாழ். செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் அச்சமயம் இதனை பார்த்தவாறு காரில் இருந்தனர். (வா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.